விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 10 திங்கட்கிழமை (26.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 282

## உலக வரலாற்றின் உன்னத தியாகி

# லெப்.கேணல் திலீபனின் நினைவு நாள் இன்றாகும்

## தமிழர் தேசமெங்கும் உணர்வுகள் தகிப்பு



*(யாழ்ப்பாணம்)*


ஈகச்சுடர் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 29ஆம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும். இந்திய அமைதிப்படைக்கு எதிராக ஐந்தம்சக் கோரிக்கையினை முன்வைத்து சாகும்வரை உண்ணா நோன்பிருந்து காந்தி தேசத்தின் அஹிம்சையையும் தாண்டி வானுயர்ந்த நிலை அடைந்த இராசையா பார்த்தீபன் என்று அழைக்கப்படும் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 29ஆம் ஆண்டு நீங்கா நினைவுகள் இன்றைய தினம் தமிழர் தேசம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளன.

தந்தை செல்வாவின் அகிம்சைப் போராட்டம் தோல்வியடைந்த பின்பு இலங்கைத் தமிழர்கள் ஆயுத போராட்டத்தைக் கையில் எடுத்தனர்.

ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து ஆயுத போராட்டத்தில் ஈடுபட்ட திலீபன் 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி ஐந்து கோரிக்கைளை முன்வைத்து உண்ணா விரதம் இருந்தார்.

24 ஆம் பக்கம் பார்க்க....

## கிபிர்க் குண்டு மீட்பு



24 ஆம் பக்கம் பார்க்க....

## சிறுவர் வழக்கை விசாரணை செய்ய நீதிபதிகள் குழாம்

(கொழும்பு)

சிறுவர்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்ய நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்புக்கு புறம்பாக நீதிபதிகள் குழாத்தினை உள்வாங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் காலத்தில் முன்னெடுக்க

24 ஆம் பக்கம் பார்க்க....

## வலி.வடக்கு குரும்பசிட்டி பகுதியில் பெருந்தொகை வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு குரும்பசிட்டி பகுதியில உள்ள கிணறு ஒன்றில் இருந்து பெருந்தொகையான வெடி பொருட்கள் நேற்றையதினம் மீட்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் மேலதிகமாக உள்ள வெடிபொருட்களை மீட்கும் பணிகள் இன்றும் நடைபெறவுள்ளது. உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து

24 ஆம் பக்கம் பார்க்க....

இன்றும் மீட்புப்பணி தொடரும்



கோப்புப்படம்

## போகம்பரை சிறைக்கு உண்ணாவிரத கைதி நேற்று மாற்றம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் போகம்பரை சிறைச்சாலைக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளார்.

கண்டி நீதிமன்றத்தில் நாளை வழக்கு விசாரணை நடைபெறவுள்ளதாலேயே அவர் போகம்பரை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதாக சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

24 ஆம் பக்கம் பார்க்க....

## இந்திய அமைச்சர் இன்று வருகை

(கொழும்பு)

இந்தியாவின் மத்திய வர்த்தக அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு இன்று கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்கு இடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்கள் தொடர்பில் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து கலந்

23 ஆம் பக்கம் பார்க்க....

## புதிய கட்சியை தொடங்கும் எண்ணமில்லை - மகிந்த

(கொழும்பு)

புதிய கட்சியை தொடங்கும் திட்டமில்லை என்ற போதிலும் கட்சியை ஒன்றை ஆரம்பிப்பதா இல்லையா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் எதிர்வரும் 8 ஆம் திகதி புத்திஜீவிகளின் சந்திப்பே நடைபெறவுள்ளது எனவும் புதிய கட்சியை தொடங்கும் நிகழ்வு அல்ல எனவும் மகிந்த கூறியுள்ளார்.

கண்டி - யட்டிநுவர, பிலித்தலாவ, ஊராபொல விகாரையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக கூறிய தற்போதைய அரசாங்கம் நல்லிணக்கத்தை இல்லாமல் செய்துள்ளது.

24 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ பவள் மோதி ஒருவர் மரணம்

## 16 வருடங்களுக்கு பின் முடிவுக்கு வந்த வழக்கு

(திருகோணமலை)

இராணுவத்தினர் பவள் வாகனம் ஒன்று மோதியதில் ஹேரத் முதியான்சலாகே ஹீன்பண்டா என்ற ஒருவர் மரணமாகிய சம்பவம் தொடர்பான வழக்கு 16 வருடங்களின் பின்னர் நிறைவுக்கு வந்துள்ளது.

திருகோணமலை சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் இரண்டு மேல் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட நீதிபதி குழாம் வழங்கிய தீர்ப்பையடுத்து ஒன்றரை இலட்சம் ரூபாய் நட்ட ஈட்டுத் தொகையை இராணுவத் தளபதி செலுத்தியுள்ளார்.

திருகோணமலையில் கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ஆம்

24 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## தங்கராசா பகவத்சிங்கம் (அங்கிள்)

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர் - ஒட்டுசுட்டான்)

முத்துஐயன் வலதுகரை 4-ம் கண்டம், பண்டாரவன்னி கிராம சேவையாளர் பிரிவை நிரந்தர முகவரியாகக் கொண்ட தங்கராசா பகவத்சிங்கம் (அங்கிள்) நேற்று முன்தினம் (24.09.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வலைஞர்மடம் தங்கராசா - அக்னேஸ் தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற கற்சிலையடி சின்னத்துரை - புவனேஸ்வரி தம்பதியினரின் மூத்த மருமகனும், தயாநிதி அவர்களின் அன்புக் கணவரும், பகவத்ஜீவன் (கோகுலன் -கனடா), தயாமதி (வித்தியா புரம்), சுதர்சினி, சுபாசினி, ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமதி (யாழ்ப் பாணம்), சுதாகரன் (முகுந்தன் - வித்தியாபுரம்), மதியழகன் (தலைவர் - ப.தெ. வ.அ.கூ.சங்கம்), சுமலதாசன் (பணியாளர் - புளியங்குளம் - ப.தெ.வ.அ.கூ. சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (26.09.2016) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஒட்டுசுட்டான் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பேராறு பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே இல.:
0064782457796 (ஜீவா கோகுலன்),
076 747 3773 (முகுந்தன்)

தகவல் :
குடும்பத்தினர்

(சி-5865)

# ஆட்டோ சாரதிகளுக்கு புதிய அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள ஒரு மில்லியன் ஆட்டோ சாரதிகளுக்கு புதிய சாரதி அனும திப்பத்திரம் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளில் உள்ள போக்குவர த்து அமைச்சுக்கள் மூலம் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் என அவர் தெரிவித்து ள்ளார்.

குருநாகலில் உள்ள அவரது அலுவலகத் தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

ஆட்டோ சாரதிகள் தொடர்பில் புதிய ஒழு ங்குமுறை திட்டங்களை அறிமுகப்படுத் தவே இந்த திட்டம் முன்வைக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள 6.3 மில்லியன் வாகன ங்களில் 3.3 மில்லியன் மோட்டார் வாகன ங்களும்,1.05 மில்லியன் ஆட்டோக்களும் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்டோவால் ஏற்படும் விபத்துக்களை குறைக்கும் நோக்குடனும் இந்த வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




## கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்திற்கு இராஜகோபுரம் அமைத்தலுக்கான கூறுவிலை கோரல்



வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்கு 09 தளங்களும் 1008 அடி உயரமானதுமான இரண்டு இராஜகோபுரங்கள் அமைக்கப்படவுள்ளமையால் இராஜகோபுரம் அமைத்ததில் ஆர்வம் கொண்ட, தேர்ச்சியும் அனுபவமும் மிக்க வல்லுநர்கள், சிற்பாசாரியார்கள் ஆகியோர் இடமிருந்து வரைபடம் மதிப்பீடு மற்றும் அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய கூறுவிலை கோரல் விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்வரும் 30.09.2016ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வீ.இராமநாதன்
தலைவர்
077 7210 399

தலைவர்
நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை,
புளியம்பொக்கணை.

தி. பிரபாகரன்
செயலாளர்
077 6591 691



# வட இலங்கை சுதேச வைத்திய சபை முக்கிய அறிவித்தல்கள்

வட மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சில் 24.09.2016 நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

- உறுப்பினர்களது அங்கத்துவத்தை புதுப்பித்தலும், புதிய உறுப்பினர்களது விண்ணப்பங்களை யும் யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் உள்ள சுகி மெடி கிளினிக் எனும் இடத்தில் தினமும் காலை 9.30 மணிமுதல் 12.00 மணிவரை 07.10.2016 ஆம் திகதி வரை விண் ணப்பங்களைப் பெற்று விதிகளுக்கு அமைவாக உரிய அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு : மாணவர்களும், கல்லூரியில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்க முடியாது.

- பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் 22.10.2016 அன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வட மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சில் நடைபெறும் என்பதை அறியத் தருவதுடன் அங்கத்தவர் அல்லாதோர் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- அதிபர், பதிவாளர், விரிவுரையாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர் பதவிக்காக அனைவரும் புதிதாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தகுதியானவர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் வட மாகாண சுதேச வைத்திய அமைச்சின் அனுமதியுடன் கண்காணிப்பு குழு திட்டப்படி பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும்.

- வட இலங்கை சுதேச வைத்திய சபை

(6025)

# எழுக தமிழ் பேரணி வரலாறு படைத்தது

## ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு வாழ்த்து




*(கொழும்பு)*

***தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணி வரலாறு படைத்துள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் தாமாக ஒன்றிணைந்து தமது கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொண்ட ஜனநாயக கடமையாகும் எழுக தமிழ் என ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு வாழ்த்து தெரிவித்துள்ளது.***

முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையில் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடந்த இப்பேரணியை ஒன்று கூடிய மக்கள் அனைவரும் ஒற்றுமையாக தமது கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

குறிப்பாக இலங்கையின் எதிர்க்கட்சி தலைவரினதும் அவரது தமிழரசுக்கட்சியினரின் எதிர்ப்பையும் மீறி தாமாக மக்கள் தமது ஒன்றிணைவைச் செய்து காட்டியுள்ளனர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள பொது அமைப்புகள், பல்கலைக்கழகம் ஆகியவை தமது பூரண ஒத்துழைப்பினை வழங்கியதோடு வர்த்தகர்கள் கடைகள் அனைத்தையும் அடைத்து பேரணிக்கான தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளனர்.

எமது இனத்தின் விடுதலை வேண்டிய பயணத்தின் ஒரு முக்கிய மைல் கல்லாக இது நிச்சயம் இருக்கும் சிங்கள பேரினவாத அரசாங்கத்திற்கும், இணக்க அரசியல் செய்யும் தமிழ்த் தலைமைகளுக்கும் இப்பேரணியின் பாரிய வெற்றியானது நிச்சயம் பேரிடியாகவே அமைந்திருக்கும். அத்துடன் வெளிநாடுகளும் தமிழ் மக்களின் எண்ண ஓட்டத்தினை புரிந்து கொள்வதற்கான ஒரு நல்ல சந்தர்ப்பத்தினையும் இது ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

புலம்பெயர்ந்த மக்களின் பேராதரவும் இப்பேரணியின் வெற்றிக்கு நிச்சயமாக காரணமாக இருந்துள்ளது. ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பும் இப்பேரணிக்கு தமது ஆதரவினை நல்கியிருந்தது.

அத்தோடு இப்பேரணிக்கு தமது ஆதரவினையும், பங்களிப்பினையும் நல்கிய அனைத்து அமைப்புக்கள் மற்றும் தமிழ் மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது என ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

## அனைத்து கட்சிகளினதும் ஆதரவுடனேயே புதிய அரசியலமைப்பு அமுல்படுத்தப்படும்!

### ஜயம்பதி விக்கிரமரட்ன தெரிவிப்பு



அனைத்து கட்சிகளினதும் ஒப்புதலுடன் அரசியல் சாசனம் அமுல்படுத்தப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரட்ன தெரிவித்துள்ளார். அனைத்து கட்சிகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் சாசனமே அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அனைத்து கட்சிகளிடமிருந்தும் கருத்துக்கள் கோரப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அரசியல் சாசனம் அமையும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-7-10)

## அநுராதபுரம் சிறையிலுள்ள அரசியல் கைதிகள் ஐந்தாவது நாளாக உண்ணாவிரத போராட்டம்

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் நீண்டகாலமாக சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் ஐந்தாவது நாளாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த புதன்கிழமை முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என வலியுறுத்தியும் பல வருடங்களாக தடுத்துவைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீதான வழக்குகள் தமிழ் பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என வலியுறுத்தியும் இவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை தெரியப்படுத்தியதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்தின் செயற்பாட்டாளரான அருட்தந்தை சக்திவேல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இந்தியா செல்கிறார் பிரதமர்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 3 ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளார். எதிர்வரும் 29 ஆம் திகதி நியூசிலாந்துக்கு விஜயம் செய்யும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு ஒக்டோபர் 3 ஆம் திகதி டில்லிக்கு செல்லவுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி இந்தியாவிற்கு செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (இ-7-10)

## மலேசியாவில் தாக்குதலுக்கு இலக்கான தூதுவர் அரசியலில் ஈடுபடத் தீர்மானம்



மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் இப்ராஹிம் அன்ஸார் அரசியலில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இப்ராஹிம் அன்ஸார் இராஜதந்திர சேவைகளில் ஈடுபடுவதை இடை நிறுத்தி விட்டு முழுநேர அரசியலில் ஈடுபட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மலேசியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் இப்ராஹிம் அன்ஸார், கடந்த நான்காம் திகதி கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து மகிந்த சுதிர்ப்பு ஆதரவாளர்களால் தாக்கப்பட்டார்.

தாக்குதலுக்கு உள்ளான இப்ராஹிம் அன்ஸாரிற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அன்ஸார் மீது தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்பது தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில், பல்வேறு தரப்பினர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதோடு கூட்டு எதிர்க்கட்சியினர் தொடர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வேகமாக வளரும் சுற்றுலா நகரங்களில் தலைநகர் கொழும்புக்கு 4 ஆவது இடம்



உலகில் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் சுற்றுலா நகரங்களில் இலங்கையின் தலைநகர் கொழும்பு நான்காவது இடத்திலுள்ளது. 2016 ஆம் ஆண்டு சர்வதேச ரீதியாக வளர்ச்சி பெற்று வரும் நகரங்களின் சுட்டெண்ணில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சுட்டெண்ணில் 132 நகரங்கள் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் நகரங்களாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. ஒசாகா, செங்டு, அபுதாபி ஆகிய மூன்று நகரங்கள் முதல் மூன்று இடங்களில் உள்ளன. (இ-7)


## போட்டியின் இறுதியும் 5–வது நாள் ஆட்டமும் இன்றாகும்

# வலுவான நிலையில் இந்திய அணி போராடுகின்றது நியூசிலாந்து அணி

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் 4-வது நாள் முடிவில் இந்திய அணி பலமான நிலையில் உள்ளது. இந்திய அணி தனது 500வது டெஸ்ட் போட்டியை நியூசிலாந் துக்கு எதிராக கான்பூர் கிரீன் பார்க் மைதானத் தில் விளையாடி வருகிறது .

இந்நிலையில், இந்திய அணி இப்போட்டி யின் முதல் இன்னிங்ஸில் 318 ஓட்டங்களை குவித்திருந்தது.

இதைத் தொடர்ந்து, நியூசிலாந்து அணியும் முதல் இன்னிங்ஸில் 262 ஓட்டங்கள் பெற்றி ருந்தது. இப்போட்டியில், இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் அதிரடியாக பந்து வீசிய நிலையில், ஜடேஜா 5 விக்கெட்டையும், அஸ்வின் 4 விக்கெட்டையும் வீழ்த்தியுள்ளனர்.



இதைத் தொடர்ந்து, 56 ஓட்டங்கள் முன்னி லையில் 2-வது மற்றும் மூன்றாம் நாள் ஆட்டத்தின் முடிவில் 1 விக்கெட்டை இழந்து 159 ஓட்டங்கள் பெற்றிருந்தது.

இந்த ஆட்டத்தில், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய முரளி விஜய் 64 ஓட்டங்களும், புஜாரா 50 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

இந்நிலையில், 4 வது நாள் ஆட்டமான நேற்று முரளி விஜய் (76 ஓட்டங்கள்), ஹோ லியும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க அடுத்து ஜோடி சேர்ந்த ஜடேஜாவும், ரோகித் சர்மாவும் சிறப்பாக ஆடி அணியின் ஓட்ட விகிதத்தை அதிகரித்தனர்.


இதைத் தொடர்ந்து, இந்திய அணி 5 விக்கெட் இழப்புக்கு 377 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலை யில் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

அடுத்ததாக களமிறங்கிய நியூசிலாந்து அணி முதல் டெஸ்டை கைப்பற்ற 434 ஓட்டங் கள் தேவை என்ற இலக்குடன் 2-வது இன்னிங் ஸை விளையாடியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய கப்டில் ஓட்டங்களின்றியும், ரோம் லேத்தம் 2 ஓட்டங் க்ளிலும் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தனர்.

அடுத்து களமிறங்கிய கேன் வில்லியம்சன் 25 ஓட்டங்களும், ரோஸ் டெய்லர் 17 ஓட்டங் களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

4-ம் நாள் ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி 37 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 93 ஓட்டங்கள் எடுத்துள்ளது. லூக் ரோஞ்சி 38 ஓட்டங்களுடனும், மிட்செல் சாண்ட்னர் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.இந்திய அணியின் அஷ்வின் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.



நியூசிலாந்து அணி இன்னும் 341 ஓட்டங் கள் எடுத்தால் மட்டுமே இந்திய அணியை வீழ்த்த முடியும். இப்போட்டியின் இறுதியும் 5-வது நாள் ஆட்டம் இன்றாகும். (க)

## 42–வது தேசிய விளையாட்டு விழா

# வட மாகாணத்தை சேர்ந்த இருவர் கராத்தேயில் வெள்ளிப் பதக்கம்

42வது தேசிய விளையாட்டு விழா கராத் தே தய்க்வண்டொ போட்டியில் வட மாகாணத் தினைச் சேர்ந்த இருவர் வெள்ளிப்பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளனர்.

இந்த மாதம் 20,21ம் திகதிகளில் கொழும்பு ரொறிண்டன் விளையாட்டு திணைக்கள உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 42-வது தேசிய விளையாட்டு விழாவில் தேசிய ரீதியான தய்க்வண்டொ போட்டியில் வட மாகாணத்தினைச் சேர்ந்த இருவர் வெள்ளிப்பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சு. தமிழ்மகள் 57-62 Kg இடைப்பட்ட பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் 75 Kg க்கு மேற் பட்ட பிரிவில் து. தனஞ்சயன் வெள்ளிப்பதக்கத் தையும் வென்று சாதனை படைத்துள்ளனர்.




30:26 என்ற புள்ளி அடிப்படையில் சு. தமிழ்மகள் கடுமையாக போட்டியிட்டு தங்கப் பதக்கத்தைத் நழுவவிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-15,250,312)

# சரே அணியுடனான சங்காவின் ஒப்பந்தம் ஒருவருடத்திற்கு நீடிப்பு

இலங்கை அணியின் முன்னாள் துடுப் பாட்ட வீரர் குமார் சங்கக்கார மேலும் ஒரு வருடத்திற்கு சரே அணிக்காக ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார்.

இதனை சரே கிரிக்கெட் அணியின் முகாமை த்துவம் அறிவித்துள்ளது. கடந்த காலங்களில் சரே அணிக்காக விளையாடி வரும் சங்கக் கார 2017 ஆம் ஆண்டுக்கும் சரே அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

குமார் சங்கக்கார சர்வதேச கிரிக்கெட்டில் 28 ஆயிரம் ஓட்டங்கள் பெற்றுக் கொண்டுள்ள துடன், இவரின் டெஸ்ட் ஓட்டங்களின் சராசரி 57.40 என்பது குறிப்பிடத்தக்கது.



சங்கக்கார சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றுள்ள நிலையில், உள்ளூர் கழகங் களுக்கான தொடர்களில் விளையாடி வருகின றமை குறிப்பிடத்தக்கது. (க)

# பள்ளி மாணவனாக மாறிய அதிரடி மன்னன் ஜெயசூரிய

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரரும், அரசியல்வாதியுமான சனத் ஜெயசூரிய பள்ளி சீருடை அணிந்து பள்ளி மாணவன் போல் மாறிய புகைப்படம் இணை யத்தில் வைரலாகியுள்ளது.

சனத் ஜெயசூரிய, தான் பயின்ற பள்ளியான மாத்தறை புனித சர்வேசஸ் கல்லூரிக்கு பள்ளி சீருடையில் மாணவன் போல் சென்று அசத்தி யுள்ளார்.

மாத்தறை புனித சர்வேசஸ் கல்லூரியில் நேற்று பழைய மாணவர்களுக்கான நிகழ்வு இடம்பெற்றது. இதில் கலந்துக் கொள்ளவே சனத் ஜயசூரிய பள்ளி சீருடையில் சென்றுள் ளார். (க)



# பான் பசிபிக் ஓபன் டெனிஸ் சானியா ஜோடி சம்பியன்



பான் பசிபிக் ஓபன் டென்னிஸ் மகளிர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் சானியா மிர்சா - பார்போரா ஸ்டிரைகோவா (செக்.) ஜோடி சம்பியன் பட்டம் வென்றது. இறுதிப் போட்டியில் சீனாவின் சென் லியாங் - ஸவோக்சுவான் யாங் ஜோடியுடன் நேற்று முன்தினம் மோதிய சானியா - ஸ்டிரை கோவா ஜோடி 6-1, 6-1 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று கோப்பையை கைப்பற்றியது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நடந்த அரை இறுதியில், டென்மார்க்கின் கரோலின் வோஸ் னியாக்கி 4-6, 7- 5, 6-4, என்ற செட் கணக்கில 2-ம் நிலை வீராங்கனை அக்னீ ஸ்காரத்வன் ஸ்காவை (போலந்து) வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரை இறுதியில் எலினா ஸ்வி டோலினாவுடன் (உக்ரைன்) மோதிய ஜப்பான வீராங்கனை நவோமி ஒசாகா 1-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இறுதிப் போட்டியில் வோஸ்னி யாக்கி - ஒசாகா மோதுகின்றனர். (க)

# பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா






நாகர்கோவில் மகா வித்தியாலயத்திற்கு அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தொகுதியினை பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா திறந்து வைத்தார்.

நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் இலங்கை வான் படையின் விமானங்கள் வீசிய குண்டுத் தாக்குதலில் பலியான மாணவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவு தினம் 22 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனதிராசா, வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா,மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன்,மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன்,வடமராட்சி வலய கல்வி பணிப்பாளர் சி.நந்தகுமார்,யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி கோ.துஷ்யந்தன்,மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி ச.திரவியராசா, மருதங்கேணி உதவிப் பிரதேச செயலர் ரஞ்சனா, அரசியல் கட்சியை சேர்ந்த வேந்தன் மற்றும் பிரதக்கல்வி பணிப்பாளர், முன்னாள் அதிபர்கள,ஆசிரியர்கள்,மதத்தலைவர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.(இ-60)

## விரைவில் மீண்டும் ஜீ. எஸ்.பி. பிளஸ் இலங்கைக்கு

(கொழும்பு)

ஐரோப்பிய சங்கத்தின் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை எதிர்வரும் சில மாதங்களில் நாட்டுக்கு மீண்டும் கிடைக்கப் பெரும் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாட்டினுள் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்ட பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)




### வைத்தியம்

உடல் பருமன் கூட்டுதல்/குறைத்தல், தலைமுடி உதிர்தல், ஆஸ்துமா, சலரோகம், பாரிசவாதம், குழந்தையின்மை, ஆண்மைக் குறைபாடுகள், தாம்பத்திய திருப்தி யின்மை, மாதவிடாய் குறைபாடுகள், வெள்ளைபடுதல், தழும்புகள் மறைய, முள்ளந் தண்டு நசிவுகள் குணமாக.

(5272)தொடர்பு:- Shan's Health Care, 255, K.K.S. Road, Kokuvil, Jaffna. T.P: 077 035 7307 (முன் பதிவு அவசியம்)



### யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியா: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)



### புறோயிலர் இறைச்சிக்கோழி விற்பனை

புறோயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்தல்.சுத்தம் செய்யப்பட்டது 1kg 500 ரூபா மட்டும். கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவுகள்.

உயிர் நிரை மொத்தக் கொள்வனவுக்கு 1kg 320 மட்டும். சில்லறைக்கு வழங்கப்படமாட்டாது.

தொடர்பு:-U-S.A பாம்
குளப்பிட்டி றோட்,
ஆனைக்கோட்டை.
T.P- 077 868 9500


## ஜோதிடத் தகவல்

### நாயிடம் கடி வாங்கும் ஜாதகர்

ஒருவரின் ஜாதகத்தில் சுக்கிரன் கெட்டு போயிருந்தால் ஒருவித துர்நாற்றம் அவர் உடலில் லேசாக வீசிக் கொண்டு இருக்கும். பொதுவாக நாய்கள் மோப்ப சக்தி மிகுந்தவை என்பதால் அந்த வாடையை முகர்ந்து பார்த்து அது அவைகளுக்கு பிடிக் காது என்பதால் அந்த நபரை உடனே கடித்து விடுகின்றன. சுக்கிரன் பலம் உள்ள ஜாதகரை நாய் எப்போதும் கடிப்பது இல்லை.

### மஹோற்சவம்

அகில இலங்கை யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் வீதி ஸ்ரீசீரடி சாயி மந்திரின் 8 ஆவது வருட ஸ்ரீசீரடி சாயி நாதரின் வருடாந்த திவ்விய மஹோற்சவம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (இ-3)

### கலாசார விழா

சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் எனினும் நாம் பறப்போம் எனும் தொனிப் பொருளில் "கலாசார விழா" எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஒக்டோபர் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9மணி முதல் யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (இ-3)

## மரண அறிவித்தல்

### திருமதி வனிதா சிவசுதன்



சித்தன் கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வனிதா சிவசுதன் 24.09.2016 சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - செல்வரஞ்சிதம் (வெற்றிப்பிள்ளை) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான சுந்தரலிங்கம் – தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சிவசுதனின் அன்பு மனைவியும் சகானா(மாணவி, யாழ்ப்பாணக் கல்லூரி), சாயித் (மாணவன்–வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் புனிதவதி , நேசராஜா (நேசன்) , காலஞ்சென்ற கலாவதி, மற்றும் இந்திராவதி (UK) றஞ்சினி (UK) ,சிவசீலன் (UK), ரவீந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பரமானந்தன் ( ஓய்வு பெற்ற பொறியியலாளர்), காலஞ்சென்றவர்களான கௌரிநாயகி , சின்னப்பு (ஓய்வு பெற்ற பொறியியலாளர்) மற்றும் Dr.இராமநாதன் (UK),Dr. குகதாசன் (UK),வளர்மதி (UK) , தேவராஜா (Commercial Bank) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.09.2016 நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் சங்கரத்தை வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவபுரம், சிவன்கோயிலடி ,
சித்தன்கேணி.
077 711 0281 (602)

தகவல்
சிவசுதன்(கணவர்)
நேசராஜா(நேசன்- சகோதரன்)

## இராசி பலன்

26.09.2016
(புரட்டாதி 10, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 3.56 மணிவரை
பூசம் முன்னிரவு 6.52 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

**மீனம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, பூர்வ-புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்கப் பிரியப் படுவர்கள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந் சேரலாம்.

**இடபம்:** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தினரின் பாராட்டுக்கள் கிடைக்கும், அரசு வழியில் அனுகூலமுணடு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்:** தனவரவு திருப்திகரமாக அமையும், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்புகள் இடம்பெறலாம்.

**கும்பம்:** வாழ்க்கைத் தரம் உயர வழி வகை செய்து கொள்வீர்கள், தேவையற்ற பகைகள் விலகும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மூலம், பூராடம் | | சந் |
| | | | ராகு<br>புத |
| செவ் | சனி | சுக் | குரு<br>சூரி |

**கடகம்:** கண்ணன் வழிபாட்டால் இன்பம் காணவேண்டிய நாள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு, தொழில் நலன்கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**மகரம்:** சொந்தபந்தங்களின் வருகையுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எடுத்த காரியங்கள் கைகூடும்.

**சிம்மம்:** திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு:** திட்டமிட்ட பணிகளில் சிறு தடைதாமதங்களைச் சந்திக்க நேரிடலாம், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் நாள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**கன்னி:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.



## தியாகத்தின் உறைவிடம் திலீபன்

நல்லூரின் வடக்கு வீதியில்
அவன் எரிந்து கொண்டிருந்தான்,
மெழுகுவர்த்தி தன் முடி மேல்
ஒரு சுடரேந்தி
தன்னையே எரித்து அழிவது போல,
அவனும் தன்னை அழித்து தீயிடை
உருகிக்கொண்டிருந்தான்.
அழிவற்ற "ஜோதியாக" அவன் வல்லமை
தேசம் எங்கும் பரவிக்கொண்டிருந்தது
அவன் ஆன்மா நாட்டையே
ஆகர்ஷித்துக்கொண்டிருந்தது.
அடக்குமுறைக்கெதிரான
முதல் தமிழ் புரட்சிக்காரன்,
வீரன் "முருகன்" சாட்சியாய் வீற்றிருக்க,
பார்த்தீபன் அகிம்சை எனும் நாணேற்றி
விடுதலைக்காய் "விரதம்" பூண்டுவிட்டிருந்தான்.
உலகின் ஐந்தாவது வல்லரசு என்றும்,
அகிம்சையின் "நதிமூலம்" என்றும்,
மார்தட்டிக்கொள்ளும் இமயத்தின்
முகடுகளை தன் சாத்வீக போரால்
ஒவ்வொன்றாக உடைத்துக்கொண்டிருந்தான்.
பாரதத்தின் ஆட்சிநெறி தவறிய
செயலுக்கெதிராக திலீபன்
போராடிக்கொண்டிருந்தான்.
ஆகக் குறைந்தது வாழ்வதற்கு ஐந்து வீடாவது
தாருங்கள்,
பாண்டவர்கள் கேட்டார்கள்
துரியோதனன் வழங்க மறுத்தான்
குருச்சேத்திர போர் வெடித்தது.
தமிழர்கள் வாழ்வதற்காய்
ஐந்து அம்ச கோரிக்கைகளையாவது
நிறைவேற்றித் தாருங்கள்
பார்த்தீபன் கேட்டான்
மறுத்தது இந்திய அரசு.
அறையப்பட்டான் திலீபன் சிலுவையில்.
மரித்த மறுநாளே தமிழர் மனங்களில்
எல்லாம் நெருப்பென மீண்டும்
உயிர்த்தெழுந்தான்.
யூதர்களின் ஆன்ம விடுதலைக்காக கிறிஸ்து
சிலுவை சுமந்தார்,
உலகின் கொடூரமான இறப்பு கிறிஸ்துவுடையது.
அகிம்சை போராட்டத்தில் வீழ்ந்த முதல் உயிர்
இழப்பு அது!
தன் இனத்தின் விமோசனத்திற்காக அவர்
முட்கிரீடம் சூடி கல்வாரி மலை மீதேறி உயிர்
துறந்து போனார்.
தமிழரின் வாழ்வுரிமைப் போர் மரபிலும்
பன்னிரெண்டாம் நாள் திலீபன்
மரித்துப்போனான்.
எவரும் உடைக்கமுடியாத தமிழர்
"மனஉறுதியின்" அடையாளமாக
அவன் வடிவமெடுத்துக்கொண்டான்.
பூக்களையும் இலைகளையும் விட வேர்
"நோக்கத்தால்"
எப்போதும் உயர்ந்தது,
ஆயுள் அதிகமானது.
பூக்களும் இலைகளும் நாட்களில் உதிர்ந்து தீரும்,
அவற்றின் நோக்கமும் எல்லைக்குட்பட்டது.
ஆனால் இவன் "வேராக" வாழ்பவன்,
என்றும் உற்றுழிந்து தீரா தமிழர் விடுதலை
தாகத்திற்காய் பலியான ஆன்மசிரஞ்சீவி!
வேம்பிலிருந்து உதிர்ந்த பூவொன்று திலீபன்
பாதங்களில் வீழ்ந்தது
அழிவற்ற எம் ஆன்மீக 'வேர்' மீது 'வேப்பு பூ'சொரிந்து
கண்ணீர்மல்க பிரார்த்தனை செய்தது.

துரோணர்

# தியாக தீபமே எங்கள் திலீபா! உன் நினைவுகள் நீங்கிவிடுமா!



இந்த உலகத்தில் எத்தனையோ தியாகிகள் தோன்றியிருக்கலாம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோரிக்கைகளுக்காக எதை எதை எல்லாமோ தியாகம் செய்திருக்கலாம். ஆனால் தனது சமூகத்திற்காக, தனது இனத்தின் விடிவுக்காக உயிரையே தியாகம் செய்தவர்களின் தியாகங்களை உலகம் என்றும் போற்றி நிற்கின்றது. உகை வரலாற்றிலே போற்றப்பட வேண்டிய திலீபனின் தியாகம் பயங்கரவாதம் என்று நோக்கப்படுவது வேதனையான ஒன்று. சரி யார் இந்த திலீபன் எதற்காக இவன் தன் உயிரையே தியாகம் செய்தான் என்பதை இன்றைய இளைசமுதாயம் அறிந்திருக்குமா என்பது சந்தேகமே.

எனவே அவர்களுக்காக அந்த தியாக தீபத்தின் சிறப்பினை இங்கே தெளிவுபடுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம் ஊரெழுவிலே பிறந்த இவரது பெயர் இராசையா பார்த்தீபன். கார்த்திகை 27.1963 இல் பிறந்த பார்த்தீபன் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்ப கால முக்கிய உறுப்பினராக செயற்பட்டவர். யாழ்.மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளராக செயற்பட்டவர். 1987 புரட்டாதி 15ஆம் திகதி ஐந்து அம்சக்கோரிக்கையினை இந்தியாவிடம் முன்வைத்து காந்தியின் வழியிலே நீர்கூட அருந்தாது உண்ணா விரதம் இருந்து தனது உயிரையே தியாகம் செய்தவர். அகிம்சை ரீதியான போராட்டங்களில் துளி அளவு நம்பிக்கை கூட இல்லாது ஈழத் தமிழர்களை ஆயுததாரிகளாக மாற்றியதோடு மட்டும் அல்லாது இந்திய வல்லாதிக்க இராணுவத்திற்கெதிராக தமிழர்களை களமுனை நோக்கி நகர்த்தியதும் இந்த திலீபனின் இழப்பே. தனது வாழ்விலே எந்த ஒரு சந்தோசத்தையும் அனுபவிக்காத வெறும் இருபத்து நான்கு வயதான அந்த இளம் தளிர் பட்டினியால் கருகிப் போனதை எளிதில் மறக்குமா தமிழினம்? எனவே தான் அதற்கான பல விளைவுகளை இந்திய வல்லாதிக்க இராணுவம் சந்திக்க நேர்ந்தது.

அமைதிப்படை என்ற பெயரிலே தமிழர் தாயகங்களை ஆக்கிரமிப்பு செய்த இந்தியாவின் கொடிய இராணுவம் இன்றுவரை மறந்திருக்காது. ஈழ மண்ணிலே புலிகளிடம் வாங்கிய அடிகளை அகிம்சையின் ஆசனமாக விளங்கும் இந்தியா ஈழத்தமிழர்களுக்கு இழைத்த அநீதிகள் ஏராளம். ஓராயிரம் சகுனியாகவும் பல்லாயிரம் கூனியாகவும் ஈழத் தமிழர் விடயத்தில் செயற்பட்டு தமிழினத்தின் இன விடுதலை போராட்டத்தை அழித்தொழித்த பெருமை இந்த இந்தியாவையே சாரும்.

இதுபோலவே இந்த தியாக தீபத்தின் இழப்பிற்கும் இந்தியாவே முழு பொறுப்பும். சுருக்கமாக கூறப் போனால் திலீபனை இந்தியா கொலை செய்தது என்றே கூறலாம். அவனது நியாயமான கோரிக்கைகளை இந்தியா நிறைவேற்றி இருந்தால் வாழ வேண்டிய அந்த இளம்தளிர் பட்டினித்தீயிலே பொசிங்கியிருக்காது.

அப்படி அவன் எதை கேட்டான். அவனது ஐந்து கோரிக்கைகளை அன்று நிறைவேற்ற முடியாத காரணம் என்ன?

❖ மீள் குடியேற்றம் என்ற பெயரிலே வடக்கு கிழக்கில் புதிதாக திட்டமிடும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

❖ அவசரகால சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

❖ ஊர்காவற்படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாக களையப்பட வேண்டும்.

❖ தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற ஐந்து கோரிக்கையே ஆகும்.

ஆனால் இன்றுவரை அந்த தியாக திலீபன் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. காந்திய தேசத்திடம் காந்திய வழியிலே போராடி தோற்றுப்போனது திலீபனது அகிம்சை. இதற்காக இந்தியா இதுவரை சிறு வருத்தமோ ஆதங்கமோ காட்டிக்கொள்ளவில்லை. மாறாக அவனை தீவிரவாதியாகவும் வன்முறையாளனாகவுமே சித்தரிக்கின்றது.

ஈழத்தமிழர்களின் வரலாற்றிலே ஒரு பாரிய சோகத்தினையும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் பேரெ முச்சிக்கும் முக்கியமான ஒரு காரணியாகவும் அமைந்தது திலீபனின் இழப்பு.

அகிம்சை ரீதியாக போராடினால் உரிமைகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும் உலகத்தில் அகிம்சைதான் சிறந்த ஒரு ஆயுதம் என்றும் வரையப்பட்ட வசனம் நல்லூரான் வீதியிலே பொய்யாகிப் போனது.

உணவின்றி, நீரின்றி வாடிப்போன அந்த இளைஞனை உலகத்தின் அகிம்சையினை போதிக்கும் எந்த ஆசானும் கண்டுகொள்ளவில்லை.

ஒரு இனத்தின் விடியலுக்காக.அந்த இனத்தின் விடுதலைக்காக தன் உயிரையே தியாகம் செய்யும் அளவிற்கு இன்றைய நவீன உலகில் மனிதர்கள் யாரும் இல்லை.

உலகத்தில் ஒன்றை இழந்தால்தான் இன்னொன்றை பெறலாம்.

ஆனால் தன்னையே இழக்கின்ற அளவு தியாகத்தினை எவராலும் செய்யமுடியாது. அப்படி ஒரு மிகப்பெரிய தியாகத்தை செய்த தியாகி திலீபனின் தியாகம் உலகத்தின் அத்தனை தியாகங்களையும் விட பெரியது. பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. இந்த நூற்றாண்டின் அகிம்சாவாதியாக சமாதானத்தின் தந்தையாக போற்றப்படும் நெல்சன் மண்டேலா இருபத்தேழு ஆண்டுகள் சிறையிலே தனது வாழ்நாளை தியாகம் செய்திருந்தார். அவரது எண்ணம் நிறைவேறியிருந்தது.

ஆனால் திலீபனின் கோரிக்கைகள் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. அவனது தியாகத்துக்கான பலன் கிடைக்கவில்லையே? நெல்சன் மண்டேலா சிறையில் இருக்கும் போதே இந்திய அரசு நேரு சமாதான விருதினை வழங்கியது. 1990 இல் பாரதரத்னா விருதினை வழங்கியது. ஆனால் தனது வஞ்சகத்தால் கொலை செய்யப்பட்ட திலீபனின் தியாகத்தினை அது மறந்துவிட்டது.அதற்காக இந்திய தேசன் சிறு வருத்தம் தெரிவிக்கவும் தயாராக இல்லை.

அகிம்சை ரீதியாகப் போராடி உயிர்நீத்த ஒருவனை பயங்கரவாதி என்று ஒதுக்கி வைப்பது அநீதி. எம் இனத்தின் விடியலுக்காகவும் விடுதலைக்காகவும் போராடிய பல்லாயிரம் வீரர்கள் பிறந்த இந்த மண்ணிலே விடுதலைக்கு வித்தாகி வீழ்ந்த உடல்கள் எத்தனை.

எப்படி எல்லாம் போராட முடியுமோ அப்படி எல்லாம் போராடிவிட்டோம்.ஆனால் நீதியும் நியாயமும் எமக்கு கிடைப்பதாக இல்லை. இனியும் என்ன செய்யப்போகின்றோம். ஒட்டுமொத்த தமிழினமும் அடிமைப்பட்ட ஒரு சமூகமாக சாகப் போகின்றோமா? அல்லது சரித்திரம் ஒன்றை மாற்றி எழுதப் புறப்படப்போகின்றோமா? மரணப்படுக்கையிலே திலீபன் சொன்னதுபோல மக்கள் புரட்சி வெடிக்கட்டும். ஒன்றுபட்ட தமிழ்ச்சமூகத்தின் குரல் ஓங்கி ஒலிக்காவிடின் ஒட்டுமொத்த தமிழினத்தின் குரல்வளையினை சிங்களப் பேரினவாதம் நசுக்கிவிடும். சுயநலமற்ற மனிதர்களாக மண்ணிலே வாழும்வரை சுயமரியாதையுடன் வாழ, சுதந்திரக்காற்றினை சுவாசிக்க எல்லோரும் ஒன்றுபடுவோம். தியாக தீபத்தின் அந்த ஒப்பற்ற வீரனின் நினைவினை சுமந்து நிற்கும் இந்த நாளிலே அவன் கோரிக்கைகளை நிறைவேற்றி அஞ்சலி செலுத்துவோம்.

ஆதி




உண்ணா நோன்பிருந்து உயிர் நீர்த்த தியாகி திலீபனின் 29 ஆம் ஆண்டு நினைவு தினத்தினை முன்னிட்டு வடமராட்சிப் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (படம் : கரணவாய் செய்தியாளர்)

# ஸ்ரீவல்லிபுராழ்வார் ஆலய மஹோற்சவ கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

ஆலயத்திற்குவருகைதரும் பக்த அடியார்கள் கலாசார உடையுடனும் ஒழுக்க சீலர்களாகவும் வழிபாட்டில் ஈடுபட வேண்டும்.

மஹோற்சவ காலங்களில் வெளியிடங்களில் இருந்து வரும் திருடர்களின் நடமாட்டம் ஏற்பட வாய்ப்புள்ளதாலும் சென்ற வருடம் பல திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றமையாலும் பக்த அடியார்கள் தங்க ஆபரணங்கள் அணிவதை இயன்றளவு தவிர்க்க வேண்டும்.

உணவுச் சாலைகள் நடத்த கோருபவர்களில் முன்னுபவமுள்ள பதிவுச்சான்றுதழ்கள் வைத்திருப்பவர்களுக்கு மட்டும் அனுமதிவழங்கப்படும்.

கடைகள் நடத்துபவர்கள், உணவுகையாள்பவர்கள் ஐஸ்கீறீம் கடை உட்பட மருத்துவச்சான்றிதழ்கள் வைத்திருத்தல் வேண்டும்.

மஹோற்சவ காலத்தில் பச்சைகுத்துதல், காதுகுத்தல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆலயச் சூழலில் கச்சான் வறுத்தல், இனிப்பு பண்டங்கள் தயாரித்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

ஆலய சூழலில் மதுபான பாவனை, சிகரெட் புகைத்தல் பொருட்களின் பாவனை, போதைவஸ்துப் பொருட்களின் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

தம் சேவைகளை மேற்கொள்ளும் பொருட்டு பருத்தித்துறை பிரதேச செயலகம், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மருத்துவ சேவை, பருத்தித்துறை சுகாதார சேவை, பொலிஸ் நிலையம், பருத்தித்துறை பிரதேச சபை என்பவற்றின் உற்சவ காலப்பணிமனைகள் கோயில் வளாகத்தில் இயங்கும்.

மஹோற்சவம் ஆரம்பமான நாள் முதல் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுவார்கள்.

அன்னதான மடங்களில் கடமைபுரிபவர்கள் மருத்துவச் சான்றிதழ் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.

பொருட்களின்விலையினை கட்டுப்படுத்த விலைக்கட்டுப்பாட்டு திணைக்களம் வழமை போன்று தம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

சமுத்திரதீர்த்தத்தின்போது கடற்படையினர் உயர்பாதுகாப்பு கடற் கண்காணிப்புபணிகளில் ஈடுபடுவர்.

பருத்தித்துறை பிரதேச சபையினர், குடிநீர் விநியோகம், கழிவகற்றல், நீர் வழங்கல்சேவை என்பவற்றை மேற்கொள்வார்கள்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை முதலுதவிச்சங்கம், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், சாரணர்கள் என்போர் சேவையில் ஈடுபடுவர்.

இ.போ.ச. தனியார் சிற்றூர்தி சங்கம் என்பன விசேட போக்குவரத்து சேவையை நடத்தவுள்ளன என பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆ.ரி.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ

# முதியோர் வார விழா

சர்வதேச முதியோர் வார விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை முற்பகல் 10 மணிமுதல் கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள முதலாம் நாள் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினராக வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி கேதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண முதலமைச்சரின் நிர்வாக உத்தியோகத்தர் ஜோன் லோரன்ஸ், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வே.தபேந்திரன், யாழ்ப்பாணப் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வி.சுரேஸ்குமார், கண்டாவளை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் சு.ஜெயானந்தராஜா, யாழ். கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் நா.கருணாகரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# புதிய வெளிச்சம் யாழில்

பேராசிரியர் டாக்டர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணனின் 'புதிய வெளிச்சம்' எனும் நிகழ்வு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நாளை 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாளை மறுதினம் 28 ஆம் திகதி புதன்கிழமை மட்டக்களப்பிலும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி மாலை 3 மணிக்கு இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்திலும் ஏனைய நிகழ்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# மேசன் பயிலுநர்களுக்கு பயிற்சி நெறி ஆரம்பம்

மேசன் பயிலுநர்களுக்கான பயிற்சிநெறியை தொடர விரும்புபவர்கள் விரைவில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிர்மாணக் கைத்தொழில் துறையில் தற்போது ஏற்பட்டுள்ள தொழிலாளர் வெற்றிடங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழுள்ள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையும் (CIDA) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் (NHDA) மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையும் (NAITA) இணைந்து மேசன் பயிலுநர்களுக்கான பயிற்சிநெறி ஒன்றினை தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றன.

அந்தவகையில் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்களை பதிவு செய்வது தற்போது இடம்பெற்று வருகின்றது. இவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும் பயிற்சிக் காலத்தில் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும் அதனுடன் இவர்களுக்கான சீருடை மற்றும் மேசன் உபகரணங்கள் என்பனவும் வழங்கப்படும்.

எனவே இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் NAITA அல்லது NHDA நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலதிக விபரங்களை (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை) 021 222 2039 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# 2016 முடிவுக்குள் கணிசமான தீர்வு

## அவுஸ்.பிரதிநிதியிடம் சீ.வீ.கே.



அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பணிமனையை சேர்ந்த உயர் அதிகாரி நிக்லஸ் பேணாட்க்கும் வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் வடமாகாண சபையிலுள்ள அவைத்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அக்கலந்துரையாடலின் பின்னர் அவைத்தலைவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய நிலை பற்றி அறிந்து கொள்வதற்காக அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிக அதிகாரி வருகை தந்திருந்தார். அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினையான அரசியல் தீர்வு தொடர்பாக ஏற்கனவே எம்மால் முன்மொழியப்பட்ட அறிக்கைகளின் பிரதிகளை வழங்கியிருந்தேன்.

2016 முடிவுக்குள் கணிசமான தீர்வு வெளிவரும் என எதிர்பார்க்கிறோம். அதற்கு சர்வதேசம் பங்களிப்பு செய்ய வேண்டும் என தெரிவித்திருந்தேன்.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை அது நீக்கப்படாவிட்டாலும் அதன் கீழான செயற்பாடுகளை நிறுத்தியிருக்கலாம். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான செயற்பாடுகள் தொடர்வது எமக்கு ஏமாற்றம் அளிக்கிறது. அரசியல் கைதிகள் விடயத்தில் நீண்டகாலம் இழுத்தடிப்பு செய்வதில் நியாயம் இல்லை இவற்றை அரசுக்கு தெளிவுபடுத்தி எமது தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி அவரிடம் கேட்டுக்கொண்டதாக தெரிவித்தார். (இ-9)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 51.75 செவ். 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L கனடா (நிரந்தரம்)<br>தொ.இ: B/5129 | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 53 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: A/L Bio Science Accountant<br>தொ.இ: G/2110 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 15<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: HNDA தாதி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/5130 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 58 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L தச்சு<br>தொ.இ: G/2124 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீடம் 4<br>கி.பா: 4.75<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: CIMA (Accounting) UKPR<br>தொ.இ: B/5131 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 39.5 செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L Bio கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/2136 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 8 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Business Management (UKNOTPR)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு PR உள்ளவர் தேவை<br>தொ.இ: B/5132 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 52.5<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/2140 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# கடுமையான பயிற்சியும் விடாமுயற்சியுமே ஒருவனைச் சிறந்த கலைஞனாக மாற்றும்

## வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் முதலமைச்சர் தெரிவிப்பு

(மன்னார்)

இன்றைய எமது அரசியல் முன்னெடுப்புக்களில் தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கையில் சுதந்திரமாகவும் சுய கௌரவத்துடனும் தமது தனிப்பட்ட அடையாளங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைப் பேணி அவற்றின்பால் ஒழுகுவதற்கு உரித்துடையவர்கள் என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். ஏனைய இனங்களின் அடக்குமுறைகளோ அதிகாரப் பிரயோகங்களோ எம்மைப் பாதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

சுதந்திரமாகவும் சகோதரத்துவத்துடனும் இந்த மண்ணில் சகல இனங்களும் வாழ்வதற்கான ஒரு சமஷ்டி முறையிலான ஆட்சிமுறையை தோற்றுவிக்கக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றது. இதன் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தமிழர்என்றோர் இனமுண்டு. தனியே அவர்க்கோர் குணமுண்டு" என்றான் பாரதிதாசன்.

தமக்கே உரிய கலை, பண்பாட்டு, இலக்கிய விழுமியங்களை பேணிப் பாதுகாப்பதிலும் மரபுவழி பண்பாட்டு இலக்கியங்களின் இலக்கண புருஷர்களாக வாழ முனைவதிலும் ஆர்வம் கொண்டவர்கள் தமிழர்கள்.

அதனால்தானோ என்னவோ எமது இனம் இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் தமது பாரம்பரிய பண்பாட்டு சுவடுகளை விட்டுவிடாது அதன்வழி நடக்க முனைந்துள்ளது. ஏனைய சமூகங்கள் எம்மை அடக்க முற்படும் போது வீறு கொண்டு எழுகின்ற தமிழினமாக மாறவும் அவர்கள் பின்னின்றதில்லை.

தோல்விகள் தரையில் அல்ல. எமது மனத்தில்தான் தோன்றுகின்றன. மனதைப் பண்பட்டதாக மாற்ற எமது பண்பாடுகள், பாரம்பரியம், வரலாறு பற்றிய அறிவு மிக முக்கியம். அதே நேரத்தில் ஒற்றுமையின் அத்தியாவசியத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே ஒற்றுமை இன்றேல் அனைவருக்குந் தாழ்வே" என்கின்றது எமது பண்பாடும் இலக்கியமும்.

எம்மிடையே காணப்படக்கூடிய மத, இன, வர்க்க வேறுபாடுகளைக் கடந்து நாம் அனைவரும் தமிழ்மொழியால் ஒன்றுபட்டு தமிழர்கள் என கூறிக்கொள்வதில் பெருமையுடையும் காலம் வெகு தொலைவிலில்லை. நாம் மதத்தினால் வேறுபட்டாலும் மொழியினால் ஒன்றுபட்டவர்களாகவே இருக்கின்றோம்.

இந்த நிகழ்வில் இந்துக்கள், கத்தோலிக்கர்கள், மறு கிறிஸ்தவர்கள்,இஸ்லாமியர்கள் என்ற வேறுபாடு இன்றி அனைவரும் தமிழால் ஒன்றிணைந்தவர்களாக அங்கு பிரசன்னமாகி இருந்தார்கள்.

சுற்றுலா வருபவர்கள் எமது பாரம்பரியங்களிலும் பண்பாட்டிலும் நாட்டம் கொண்டே இங்கு வருகின்றார்கள். தம்மை விட வேற்று பாரம்பரியங்களைக் கொண்ட மக்களையும் அவர்களின் கலாசாரங்களையும் அறியவும் அவதானிக்கவுமே வருகின்றார்கள். எனவே எமது பாரம்பரியங்களைப் பாதுகாப்பது பொருளாதார விருத்திக்கும் அடிகோலுகின்றது.

இன்றைய எமது அரசியல் முன்னெடுப்புக்களில் தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கையில் சுதந்திரமாகவும் சுய கௌரவத்துடனும் தமது தனிப்பட்ட அடையாளங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைப் பேணி அவற்றின்பால் ஒழுகுவதற்கு உரித்துடையவர்கள் என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். ஏனைய இனங்களின் அடக்கு முறைகளோ அதிகாரப் பிரயோகங்களோ எம்மைப் பாதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

சுதந்திரமாகவும் சகோதரத்துவத்துடனும் இந்த மண்ணில் சகல இனங்களும் வாழ்வதற்கான ஒரு சமஷ்டி முறையிலான ஆட்சி முறையை தோற்றுவிக்கக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

புதிய அரசியல் யாப்பு திருத்தங்களுக்கான முன்னெடுப்புக்கள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அந்தக் காலப் பொழுதில் எமது வாழ்வியல் உறுதிப்பாடுகளையும் அடையாளங்களையும் மற்றும் இன்னோரன்ன பண்பாட்டு விழுமியங்



களையும் பாதுகாத்து அவற்றை எமது அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லக் கூடிய வழி வகைகளையும் நாம் ஆராய வேண்டும்.

கலை என்பது ஒரு நாளில் அல்லது ஒரு சில மணித்தியாலங்களில் வந்துவிடுவதல்ல. கடுமையான பயிற்சியும் விடாமுயற்சியுமே ஒருவரை சிறந்த கலைஞராக மாற்ற முடியும். அந்தவகையில் இன்றையவாறான முன்னெடுப்புக்களும் ஊக்கப்படுத்தல்களும் எமது கலை வடிவங்கள், கலைப்படைப்புக்கள், கவிதைகள், ஓவியங்கள், நடனங்கள் என அனைத்து அடையாளங்களையும் பேணிப் பாதுகாப்பதற்கும் அவற்றை விரிவாக்கம் பெற வைப்பதற்கும் ஒரு உந்துதலாக அமைவன என்பதில் ஐயமில்லை. (2-4)






1987 ஆம் ஆண்டு இந்திய அரசுக்கு எதிராக அகிம்சை வழியில் போராடிய ஈழவிடுதலைப் போராளி தியாகி திலீபனின் 29 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று கிளிநொச்சி அறிவகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதைப் படங்களில் காணலாம்.

# கள்ளிக்குளம் கிராமத்தில் மீள்குடியேறிய மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்

## வடக்கு மாகாணசபை சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா, கள்ளிக்குளம் கிராமத்தில் மீள்குடியேறிய மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படுமென வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

கள்ளிக்குளம் பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையாவது,

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளால் 1990களில் அங்குள்ள மக்கள் முற்றாக இடம்பெயரநேரிட்டது.

இதன்பின்னர் 2010 இல் மக்கள் மீள் குடியேறியுள்ளனர். 1990களில் 45குடும்பங்கள் வாழ்ந்து வந்துள்ள நிலையில் தற்போது 212 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

இவர்களுக்கான அரை நிரந்தர வீடுகள், மலசலகூடங்கள், கிணறுகள் அரசசார்பற்ற நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டுள்ள நிலையில் சில அடிப்படை வசதிகள் இதுவரை செய்யப்படாதுள்ளமை வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

குறிப்பாக வீதி அபிவிருத்தி, குடிநீர்வசதி, போக்குவரத்து வசதி, மருத்துவ வசதிகள் மற்றும் வாழ்வாதார வசதிகள் போன்றன அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகள் இந்தக் கிராமத்தில் மட்டுமல்ல வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் உள்ளன. 30 வருட கொடிய யுத்தம் அதனால் ஏற்பட்ட இடம்பெயர்வுகள் மக்களின் வாழ்வியலை சிதைத்துள்ளது.

படிப்படியாகவே மக்களின் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும். வவுனியா பிரதேச செயலகம் உங்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்து அவற்றினை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை செய்து வருகின்றார்கள்.

அரசாங்க அதிகாரிகளால் அனைத்தையுமே உடனடியாக செய்து விடமுடியாது. அவர்களுக்கும் சில வரையறைகள் உள்ளன.

உங்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட உங்களின் பிரதிநிதிகள் நாங்கள். உங்களின் பிரச்சினைகளை தீர்க்க எங்களால் முடிந்தவற்றை செய்ய முனைப்புக் காட்டுவோம்.

முதற்கட்டமாக சிறுநீரக நோயின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் நோக்கில் சுத்தமான வடிகட்டிய குடிநீர் வழங்கல், மின்சார இணைப்பை விரிவுபடுத்தல், வீட்டுத்தோட்டச்செய்கை மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையம் என்பன தொடர்பில் உடனடி கவனம் செலுத்துவதாக வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக்கூட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், கள்ளிக்குளம் கிராம அலுவலர் அமலதாஸ், கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் ராமதாஸ் உட்பட பெருமளவிலான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பணம்

(பனிக்கன்குளம்)

மாங்குளம் மாவடி சித்தி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

மாங்குளம் மாவடி சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபை தலைவர் சச்சிதானந்தமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா கலந்து கொண்டு அறநெறி பாடசாலையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா, துணுக்காய் கல்வி வலய சைவ சமய பாட ஆசிரிய ஆலோசகர்,மாங்குளம் சண்முகரத்தினம் வித்தியாலய அதிபர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (2-281)

# யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினுள் தீ

## 15 ஏக்கர் நிலப்பகுதி எரிந்து நாசம்



வவுனியாவில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் பாரிய தீ அனர்த்தம் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு ஏற்பட்டது.

வவுனியா பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பகுதியிலேயே இப்பாரிய தீ அனர்த்தம் ஏற்பட்டது. வவுனியாவில் நிலவிவரும் கடும் வறட்சி மற்றும் பலமான காற்றின் காரணமாக தீ வேகமாக பல இடங்களில் பரவுவதைக் காணக் கூடியதாக இருந்தது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தீ பரவுவதை அறிந்த பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து வவுனியா பொலிஸாரின் தண்ணீர் பவுசரின் மூலம் தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மன்னாரில் நிகழ்வு ஒன்றுக்கு பாதுகாப்பிற்கு சென்றிருந்த வவுனியா நகர சபைக்கு சொந்தமான தீ அணைக்கும் வண்டியானது சுமார் ஒரு மணிநேரம் தாமதமாக சம்பவ இடத்திற்கு வந்தபோதிலும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

இத்தீயின் காரணமாக சுமார் 15 ஏக்கர் நிலப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளதாக தெரியவருகிறது

இத் தீ சம்பவம் விசமிகளின் நாசவேலையாக இருக்கலாம் என்ற நிலையில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (2-250)

# அணையாத தியாகச்சுடர் திலீபனின்

## நினைவு நிகழ்வு அறிவகத்தில் அனுஷ்டிப்பு

1987 ஆம் ஆண்டு இந்திய அரசுக்கு எதிராக அகிம்சை வழியில் போராடிய ஈழ விடு தலை போராளி தியாகி திலீப னின் 29 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி அறிவகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. கட்சியின் இளைஞர் அணித்தலைவர் சுரேன் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுல ராஜாவும் அணிவித்தனர். பின்னர் ஈகைச்சுடர் ஏற் றப்பட்டது. தொடர்ந்து ஈழ விடுதலைப்போராட்டத்தில் வீரகாவியமான மாவீரர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களுக்குமாக அக வணக்கம் செலுத்தப்பட்டு மலர் வணக்கமும் இடம் பெற்றது.

தொடர்ந்து சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட குருதி கொடையளித்தல் நிகழ்வில் கட்சியின் தொண்டர்கள். அங்கத்தவர்கள். மக்கள் ஒன்றிணைந்து கிளிநொச்சி பொது வைத்திய சாலையின் இரத்த வங்கி பிரிவுக்கு 50 இற்கு மேற்பட்டோர் இரத்ததானம் வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் மற்றும் இரணைமடு கமக்கார அமைப்பின் தலைவர் சிவமோகன். ஊடக சங்கத் தலைவர் டாக்டர் திரு லோக மூர்த்தி. அழகக சங்கத் தலைவர்.வர்த்தக சங்கச் செயலாளர். காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பின் தலைவி மற்றும் கட்சியின் தொண்டர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2)

# கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 42 ஆயிரத்து 55 பேர் மீள்குடியேற்றம்

## செயலகப் புள்ளிவிபரத்தின்படி

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழ் 13 ஆயிரத்து 213 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 55 பேர் இதுவரை மீள்குடியேறியுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள பகுதிகளில் இதுவரை 13 ஆயிர்த்து 213 குடும்பங்களைச் சேர்ந்த ந42 ஆயிரத்து 55 பேர் மீள்குடியேறியுள்ளனர்.அதாவது 10 ஆயிரத்து 743 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 235 தமிழர்களும் 2 ஆயிரத்து 198 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 178 முஸ்லிம்களும் 272 குடும்பங்களைச் சேர்ந்த 642 சிங்கள மக்களும் மீள்குடியேறியுள்ளதாக பிரதேச செயலகப் புள்ளிவிபரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# கப் வாகனம் மோதியதில் ஆட்டோ தடம் புரள்வு

## சாரதி படுகாயம்



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி புளியம்பொக்கணை ஏ-35 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோவை பின்னால் வந்த கப்ரக வாகனம் மோதி விட்டு தப்பிச் சென்றதில் ஆட்டோவைச் செலுத்திச் சென்ற மாற்றுத் திறனாளியான சாரதி படுகாயமடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்து பரந்தன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோவை நேற்று முன தினம் பிற்பகல் 1.30 மணியளவில் பின்னால் வந்த கப்ரக வாகனம் மோதியதில் ஆட்டோ தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது ஆட்டோவைச் செலுத்திச் சென்ற மாற்றுத்திறனாளியான சாரதி படுகாமடைந்துள்ளதுடன் ஆட்டோவில் பயணித்த தாயும் குழந்தையும் தெய்வாதீனமாக காயங்கள் எதுவுமின்றி தப்பியுள்ளனர்.

குறித்த விபத்துடன் தொடர்புபட்ட கப்வாகனம் தப்பிச் சென்றுள்ளது. (2-281)



# இராணுவ மந்துவிக் காட்சியகத்தில் இருந்த புலிகளின் போர்த்தளபாடங்கள் அகற்றம்

முல்லைத்தீவு இராணுவ மந்துவிக் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் போர்த்தளபாடங்கள் அனைத்தும் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளன.

இராணுவத்தினரின் அதிவேக செயற்பாட்டின் மூலம் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ள சுற்றி கட்டப்பட்டிருந்த மதில் சுவர்களும் இடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தெரியாத சிங்கள மக்கள் குறித்த இடத்திற்கு பார்வையிட சென்று ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளனர்.


குறித்த காட்சியகத்தில் விடுதலைப்புலிகள் இராணுவத்தினரிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களைவிட புலிகளினால் தயாரிக்கப்பட்ட போர்படகுகள் மற்றும் கனரக ஆயுதங்களே அங்கு அதிகம் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அண்மை நாட்களாக போர்ப்படகுகள் மெல்ல மெல்ல அகற்றப்பட்ட நிலையில் தற்பொழுது அனைத்து போர்த்தளபாடங்களும் அகற்றப்பட்டு குறித்த வளாகம் தரைமட்டமாக காட்சியளிக்கின்றது.

யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்கள் கடந்த நிலையில் விடுதலைப் புலிகளின் பெருமளவு போர்த்தளபாடங்கள் குறுகிய நாட்களில் படையினர் அப்புறப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர்களை சந்தித்து கிராமத்தின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல்

## வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது





வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர்களை சந்தித்து கிராமத்தின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலுக்காக கிராமங்களிலிருந்து 200 உறுப்பினர்கள்கலந்து கொண்டதுடன் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை செயலாளர் திருமதி கிசோர் சுகந்தினி ஆகியோர் கலந்துகொண்டு கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர்களின் கிராம பிரச்சினைகளுக்கு பதிலளித்திருந்தனர்.

நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயலாளர் கிசோர் சுகந்தினி,

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையானது 182 கிராமங்களை உள்ளடக்கியதாகவும் 39 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய மற்றும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மக்களை உள்ளடக்கிய 700 கிலோமீற்றர் பாதைகளை உள்ளடகிய மிகப்பரந்த அளவில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு உள்ளக கட்டுமான வசதிகள் அற்ற நிலையிலே வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையானது இயங்கிக்கொண்டிருக்கின்றது என குறிப்பிட்டார்.

நிகழ்வில் கலந்து கொண்டு வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா பதிலளிக்கையில்,

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரிவின் எல்லைக் கிராமங்களுக்கு 350 வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. வாழ்வாதாரமானது முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் காணாமற்போனோருக்கான உறவுகளுக்கு மற்றும் சிறுநீரக பாதிப்புக்குள்ளானவர்களுக்கும் வழங்கப்படுகிறது என தெரிவித்தார்.

நிகழ்வில் கலந்துகொண்டு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் உரையாற்றுகையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு குடிநீர் மற்றும் போக்குவரத்து கல்வி போன்ற பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கிராமங்களுக்கு சென்று நேரடியாக மக்களை எதிர்காலத்தில் சந்தித்து அவர்களின் குறைகள் கேட்டறியப்படும். கிரம மக்களின் பிரச்சினைகளை எழுத்தில் கொடுக்கும் போது அப்பிரச்சினைகள் சரியாக கையாளப்படும் என சுட்டிக்காட்டினார். கிராமங்களுக்குச் சென்று மக்கள் கருத்தறிந்து நிதி ஒதுக்கீடு செய்யும்படி ஜனாதிபதி அறிவித்துள்ளார். அதன் அடிப்படையில் கிராமங்களுக்கு சென்று கிராமங்களுக்கு தேவையான நிதி வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படும் என தெரிவித்தார். (2-250)

# காலபோக நெற்செய்கை கலந்துரையாடல் திகதிகள்

முள்ளியவளை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புகளின்2016-2017 காலபோக நெற்செய்கை கல ந்துரையாடல் திகதிகள் முள்ளியவளை கமநலசேவை நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விவசாயிகளுக்கான கூட்டங்கள் யாவும் இன்று திங்கட்கிழமை முள்ளிய வளை கமநல சேவை நிலைய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும்.

இதனடிப்படையில் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு முள்ளியவளை தெற்கு வாரிவண்ணான் குளம், நீராவிக்குளம், பெரிய புளியங்குளம், தேன் தூக்கிக் குளம் ஆகிய விவசாயிகளுக்கான கூட்டம் நடைபெறும்.

இன்று முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவளை மத்தி, தொத்திமோட்டை, ஆராய்ச்சியா முறிப்பு, துவரம் பட்டை ஆகிய விவசாயிகளுக்கான கூட்டம் நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு நீராவியூற்றுக்குளம், பதறிக்குளம், நீராவியூற்றுக்கேணி ஆகிய விவசாயிகளுக்கான கூட்டமும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பகுதி விவசாயிகளைதவறாதுகலந்துகொள்ளுமாறு முள்ளியவளை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.சுதர்சன் கேட்டுள்ளார். (2-5-302)

# வழக்குத் தொடர்வது அநீதி

## கோத்தபாய கூறுகிறார்

(கொழும்பு)

**கடந்த யுத்த காலத்தில் ஏற்பட்ட அவசியத் தேவையை நிறைவு செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானமே மிதக்கும் ஆயுத களஞ்சிய மாகும். இந்த தீர்மானத்துக்கு எதிராக தற்பொழுது வழக்குத் தொடர் வது என்பது அநீதியான ஒன்றாகும் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



மிதக்கும் ஆயுத களஞ் சியசாலை உருவாக்கப்பட்டது இலங்கையைப் பொறுத்த வரையில் புதியதாக இருப் பினும், ஏனைய நாடுகளில் சாதாரண விடயமாக காணப் படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

கடல் கொள்ளைக்காரரர் களைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையை யாவது மேற்கொள்ளுமாறு ஐ.நா. சபையினால் சகல நாடுகளும் கேட்கப்பட்டிருந் தன.

இந்தவகையில், கடல் கொள்ளையர்களிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு உல கில் பலமுள்ள நாடுகள் பல் வேறு முயற்சிகளை முன் னெடுத்த போதிலும் அவை தோல்வியடைந்தன.

இந்த கடல் கொள்ளை யர்களிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு எமது நாட்டிலும் ரக்னா லங்கா தனியார் பாது காப்பு நிறுவனம் உட்பட 22 தனியார் கம்பனிகளுடன் இணைந்து இவ்வாறான ஓர் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனால், பலருக்கு தொழில் வாய்ப்புக்களும் கிடைக்கப் பெற்றன. வெளிநாடுகளிலி ருந்து கொண்டுவரும் ஆயு தங்களை பாதுகாப்பான முறை யில் வைத்திருப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை வழங்கவும் முடியுமாக இருந் தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# துப்பாக்கி விற்பனையுடன் தொடர்புடையோர் கைது

(கொழும்பு)

துப்பாக்கி விற்பனையு டன் தொடர்புடைய இரண்டு நபர்களை மிரிஹான பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத் தடுப்பு நடவடிக்கை பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர்களிடம் இருந்து 12 ரக குழல் துப்பாக்கி மற்றும் 2 தோட்டாக்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மீட்டியாகொடை பிரதே சத்தை சேர்ந்தவர்களே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ள னர்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர்கள் கெஸ்பேவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட உள்ளதுடன் மிரி ஹான பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர்.

அதேவேளை ஹெரோ யின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்கிஸ்சை, சொய்சாபுர மற்றும் வத்தளை கல்வெட் டிய வீதி ஆகிய பகுதிகளில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு சந்தேக நபரிடம் இருந்து 13.140 கிராம் ஹெரோயின் கைப்பற்றப் பட்டுள்ளதுடன் மற்றைய நபர்கள் இருவரிடம் இருந்து 7 கிராம் ஹெரோயின் கைப் பற்றப்பட்டுள்ளது. (இ-7)

# நீங்கள் தீ வைப்பது காட்டுக்கா? பிள்ளையின் எதிர்காலத்திற்கா?




(கொழும்பு)

'நீங்கள் தீ வைப்பது காட் டுக்கா அல்லது உங்கள் பிள் ளையின் எதிர்காலத்திற்கா'? என்ற வினாவுடன் கூடிய தொனிப்பொருளை மைய மாகக் கொண்டு, ஊவா பரண கம பொலிஸார், கிராம சேவ கர்கள் மற்றும் தொழில் நுட்ப அதிகாரிகள் போன்றவர் களை தெளிவூட்டும் நிகழ்ச் சித்திட்டமொன்று நேற்று முன் தினம் ஊவா பரண கமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது, வனங்க ளின் முக்கியத்துவம், வனங் களை பாதுகாப்பதன் அவசி யம் காடுகளுக்கு தீ வைப்பத னால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அவ்வாறான செயற் பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் தொடர் பிலும் இங்கு தெளிவூட்டப் பட்டன.

வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் பதுளை மாவட்டக் காரியாலயம், வெலிமடை வனவள காரி யாலயம் என்பன இணைந்து இத் தெளிவூட்டும் நிகழ் வினை ஏற்பாடு செய்திருந் தது. (இ-7)

# ஜனாதிபதி- ஐ.தே.க. இரகசிய ஒப்பந்தம்

ஐக்கிய தேசிய கட்சி உறுப் பினர்கள் சிலர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவு டன் இணைந்து இரகசிய நடவடிக்கை ஒன்றை மேற் கொண்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி உறுப் பினர்கள் 28 பேர், கட்சி தலைவர் மற்றும் சபை தலை வருக்கு உரிய முறையில் அறிவிக்காமல் ஜனாதிபதியு டன் நியூயோர்க் விஜயத்தில் ஈடுபட்டமையை தொடர்ந்தே இந்த தகவல் வெளியாகியுள் ளது.

நாடாளுமன்றத்தில் முக் கிய நிதி சட்டமூலங்கள் இரண்டினை சமர்ப்பிக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் சட்ட ரீதியான அனுமதியின்றி பல்வேறு தனிப்பட்ட காரணங் களுக்கமைய இவர்கள் வெளி நாடு சென்றுள்ளனர்.

குறித்த உறுப்பினர்கள் இறுதியில் நியூயோர்க் நக ரில் ஐ.நா.பொதுச்சபை கூட் டத்தில் ஜனாதிபதி உட்பட குழுவின் இணைந்துள்ள முறை ஐக்கிய தேசிய கட்சியின் உயர்மட்ட தலைவர்களுக்கு குழ ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் தகவல் வழங்குமாறு சபை தலை வர் லக்ஷ்மன் கிரியெல்ல வினால் கடிதம் மூலம் இந்த உறுப்பினர்களுக்கு அறிவிக் கப்பட்டுள்ளது.

இந்த உறுப்பினர்கள் ஐ.நா.பொதுச்சபை கூட்டத்தில் கலந்து கொண்டமைக்கான காரணம், அவர்களின் இராஜ தந்திர பயணத்தில் மேற்கொள் ளப்பட்ட உத்தியோகபூர்வ கடமைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொள்ளுப்பிட்டி விடுதியில் கடற்படை வீரரின் சடலம்

கொள்ளுப்பிட்டிய பிர தேசத்திலுள்ள தற்காலிக விடுதியொன்றிலிருந்து கடற் படை வீரர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடுதியின் அறை யில் இவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்த நிலையில் இவரது சடலம் மீட்கப்பட்ட தாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

22 வயதுடைய இந்த கடற்படை வீரர் நுகேகொடைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என கண்டறியப்பட்டுள்ளது.

இவர் கடந்த 23 ஆம் திகதி இந்த விடுதிக்கு வருகை தந்துள்ளார்.

இவர் அறையிலிருந்து வெளியே வராத காரணத் தினால், விடுதியின் முகா மையாளர் பொலிஸுக்கு அறிவித்துள்ளார்.

இதன் பின்னர் மேற்கொள் ளப்பட்ட விசாரணையின் போது இவரின் சடலம் மீட்கப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். (இ-7)

# இலங்கை ஆண்களுக்கு ஜப்பானியப் பெண்களை திருமணம் செய்ய வாய்ப்பு

ஜப்பானியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் இடை யில் காணப்படும் நெருக்கமான கலாசார சமநிலை காரண மாக ஜப்பானியர்கள் இலங்கை யர்களை திருமணம் செய்ய ஆர்வம் காட்டுவதாக கார் டின் மெரேஜ் நிறுவனத்தின் உரிமையாளரான மியகோ தகசு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜப்பானியர்களை திரு மணம் செய்ய விரும்பும் இலங்கையர்களிடம் எவ் வித கட்டணமும் அறவிடா மல், ஜப்பான் - இலங்கை திருமண சேவையை ஆரம் பிக்க தமது நிறுவனம் விரை வில் நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜப்பானில் உள்ள பிரை டல் லைனைஸ் நிறுவனத் தின் இணை நிறுவனமான கார்டின் மெரேஜ் நிறுவனம் டோக்கியோவில் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது. (இ-7)

# ஒபாமாவுக்கு ஆறு வயதுச் சிறுவன் எழுதிய நெஞ்சை உருக்கும் கடிதம்



அமெரிக்காவின் 6 வயதுச் சிறுவன் ஜனாதிபதி ஒபாமா வுக்கு எழுதிய கடிதம் தான் தற்போது சமூக வலைத்தளங் களில் உலா வருகிறது.

அமெரிக்காவின் Scarsdale பகுதியை சேர்ந்த அலெக்ஸ் (வயது -6). இவர் அண்மையில் அமெரிக்கா ஜனாதிபதியான ஒபாமாவுக்கு கடிதம் ஒன்றை எழுதி அனுப்பியுள்ளான்.

அதில் சிரியாவில் வான் வழிதாக்குதலின் போது பாதிக் கப்பட்ட Omran Daqneesh (வயது-5) இரத்தவெள்ளத்துடன் அம்புலன்சில் இருக்கிறார். அவரை தங்கள் வீட்டிற்கு அழைத்து வர முடியுமா என கேள்வி எழுப்பியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் Omran Daqneesh க்கு தான் ஒரு குடும்பத்தை அளிக்க விரும்புவ தாகவும் தெரிவித்துள்ளார்.

இதை அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமா ஐ.நா.சபையின் உச்சி மாநாட்டில் பலருக்கும் மத்தி யில் வாசித்து காட்டினார்.

இச்சிறுவன் தனக்கு சிரியா கற்றுக்கொடுத்து விட்டதாக ஆங் மனிதாபிமானம் தற்போது உள்ள குழந்தைகளிடம் உள் ளது என இச்சிறுவன் நிரூ பித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

அச்சிறுவன் எழுதிய வார்த்தைகளையும், அவன் பேசியதையும் ஒபாமா தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவேற் றம் செய்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு மட்டும் 10 ஆயிரம் சிரிய அகதிகளுக்கு அடைக் கலம் தரப்பட்டுள்ளது. இதைத் தவிர உலகின் பல்வேறு நாடுகளிலும் சிரிய அகதிகள் தஞ்சம் அடைகின்றனர் என வும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து பயணிக்க முடியாது

## சு.க. செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செல்ல முடியாது எனக் காரணம் காட்டி, தனியான கட்சி அமைப்பதற்கு கூட்டு எதிர்க் கட்சியினர் திட்டமிடுவது ஒரு தனிக் குடும்பத்தைப் பாது காப்பதற்கேயாகும் என ஸ்ரீ. ல.சு.கயின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரி வித்தார்.

ஏப்பாவளை பிரதேசத்தில் உள்ளூராட்சி சபை உறுப் பினர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து அரசியல் பய ணத்தில் ஈடுபடுவது சாத்திய மற்றது என்பதனால், புதிய திட்டங்களுடன் கட்சியைக் கொண்டு நடத்த வேண்டி யுள்ளதாகவும் அவர் தெரி வித்தார். (இ-7)



# CHEMISTRY

## DIAS B.Sc(Hons).Spl. in Chem.

## A/L 2018 Serial Exam-5 Aug 2016

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

NEW SCIENCE WORLD

| Index no | முழுப்பெயர் | School | Med | Marks | Rank |
|---|---|---|---|---|---|
| J/2302/B | அபிராமி சிவசண்முகராஜா | J/V.G.H.S | Eng | 96 | 1 |
| J/2001/B | மிலெனி கிறிசாந்தி மரியதாசன் | J/V.G.H.S | Tam | 96 | 1 |
| J/1208/M | கேதீஸ்வரன் யதுஷனன் | J/J.H.C | Eng | 94 | 3 |
| J/2212/B | நிர்மலானந்தன் சுஜீவன் | J/J.H.C | Eng | 94 | 3 |
| J/2213/B | லோகேஸ்வரன் ஸ்ரீகர்சன் | J/V.J.C | Eng | 93 | 5 |
| J/1293/M | அலெக்சாண்டர் கஸ்ரோ டிரோன் | J/S.P.C | Tam | 92 | 6 |
| J/1563/M | குகதாஸ் சாருஜன் | J/J.H.C | Eng | 92 | 6 |
| J/5203/M | செல்வநேசன் கஜானன் | J/K.H.C | Tam | 92 | 6 |
| J/2309/B | பவளசீலன் சர்மிகன் | J/J.H.C | Eng | 91 | 9 |
| J/1374/M | புஷ்பகுமார் சரவணன் | J/V.J.C | Tam | 90 | 10 |
| J/1407/M | றொபேட் ஆனந்தராஜ் தர்ஷன் | J/J.H.C | Tam | 90 | 10 |
| J/1134/M | கணேசமூர்த்தி கஜவரன் | J/J.H.C | Tam | 89 | 12 |
| J/1210/M | கௌசிகா அரசு | J/M.L.C | Eng | 89 | 12 |
| J/2002/B | கஸ்தூரி பரமானந்தன் | J/V.G.H.S | Tam | 89 | 12 |
| J/1064/M | முத்துலிங்கம் தனோறாஜ் | J/J.H.C | Tam | 89 | 12 |
| J/1089/M | சிவனேஸ்வரன் யமில்ராஜ் | J/J.H.C | Tam | 89 | 12 |
| Kn/2086/B | சிவபாலன் பவித்திரன் | Kn/K.M.V | Tam | 89 | 12 |
| J/2439/B | தவபாலசுந்தரம் நீலலோகன் | J/J.H.C | Eng | 89 | 12 |
| J/2214/B | தேவந்தி கணேசலிங்கம் | J/V.G.H.S | Eng | 89 | 12 |
| J/2205/B | துவாரகா தேவராசா | J/V.G.H.S | Eng | 89 | 12 |
| Kn/2181/B | அபிஷிகா கருணானந்தன் | Kn/P.C.C | Tam | 88 | 21 |
| J/2238/B | கோமஸ்வரன் வித்தகன் | J/J.H.C | Tam | 88 | 21 |
| J/1522/M | இலக்ஸ்மன் கிசாந் | J/J.H.C | Eng | 88 | 21 |
| J/1067/M | சண்முகவடிவேல் கோபிநாத் | J/J.H.C | Tam | 88 | 21 |
| J/1095/M | தர்மராசா சஜீபன் | J/M.C | Tam | 88 | 21 |
| J/2119/B | துளசிகா கண்ணதாசன் | J/V.G.H.S | Tam | 88 | 21 |
| J/2609/B | கோபிகா விஸ்வநாதன் | J/V.G.H.S | Eng | 87 | 27 |
| J/2222/B | சாரங்கா சத்தியகுமார் | J/V.G.H.S | Tam | 87 | 27 |
| J/2304/B | சௌமிகா புருசோத்தமன் | J/C.G.C | Eng | 87 | 27 |
| J/1233/M | சுகேந்திரன் லக்ஷன் | J/J.H.C | Tam | 87 | 27 |
| J/2156/B | வைஷ்ணவி கண்ணதாசன் | J/V.G.H.S | Tam | 87 | 27 |
| J/1209/M | அகிலதாஸ் சங்கீதன் | J/J.H.C | Eng | 86 | 32 |
| J/2225/B | அருள்பிரகாசம் அன்புச்செல்வம் | J/J.H.C | Tam | 86 | 32 |
| J/1066/M | ஈஸ்வரன் நந்தலக்சன் | J/J.H.C | Tam | 86 | 32 |
| J/2165/B | கிருத்திகா ரவிதாஸ் | J/S.C | Tam | 86 | 32 |
| J/2027/B | மகாலிங்கம் கிரிதரன் | J/V.J.C | Tam | 86 | 32 |
| J/1158/M | காசிலிங்கம் கபிலன் | J/J.H.C | Tam | 85 | 37 |
| J/2425/B | கிரிதரன் அகீபன் | J/J.H.C | Eng | 85 | 37 |
| J/2372/B | மோகனதாஸ் டயஸ் | J/J.H.C | Tam | 85 | 37 |
| J/2495/B | நிமலன் பிருந்தாபன் | J/J.H.C | Tam | 85 | 37 |
| J/2591/B | சமீனா ஜெயக்குமார் | J/V.G.H.S | Tam | 85 | 37 |
| J/1050/M | செல்வராசா செந்தில்குமரன் | J/J.H.C | Tam | 85 | 37 |
| J/1242/M | மந்திரமூர்த்தி பரத்ராஜ் | J/J.H.C | Tam | 85 | 37 |
| J/2218/B | சுப்பிரமணியம் சுபாஷன் | J/J.H.C | Tam | 85 | 37 |
| J/2387/B | தாருகா ஜனகன் | J/V.G.H.S | Tam | 85 | 37 |
| J/2030/B | தயாநேசன் சஞ்ஜீவன் | J/S.P.C | Tam | 85 | 37 |
| J/1465/M | யோகேஸ்வரன் சுஜீபன் | J/K.C.C | Tam | 85 | 37 |
| J/2207/B | அபிலாஷா அருள்மொழி | J/V.G.H.S | Eng | 84 | 48 |
| J/2362/B | ஜிவித்தனா கமலச்சந்திரன் | J/V.G.H.S | Tam | 84 | 48 |
| J/2135/B | கம்சிகா குணரத்தினம் | J/C.H.C | Tam | 84 | 48 |
| J/2206/B | தீபனா கோவிந்தராஜா | J/V.G.H.S | Eng | 84 | 48 |
| J/2414/B | தியாகச்சந்திரன் துவாரகன் | J/J.H.C | Tam | 84 | 48 |
| J/1044/M | தியாகராஜா சகீர்தன் | J/J.H.C | Tam | 84 | 48 |
| J/2440/B | முத்துக்குமாரசாமி லக்ஷ்மன் | J/J.H.C | Eng | 83 | 54 |
| J/1228/M | நர்த்தனா சிவலிங்கம் | J/V.J.C | Tam | 83 | 54 |
| J/1096/M | சத்தியலோகேஸ்வரன் லிங்கேஸ்வர | J/M.C | Tam | 83 | 54 |
| J/1203/M | சிவஞானம் கஜானன் | J/J.H.C | Eng | 83 | 54 |
| J/2359/B | சுவேந்திரா அருச்சுனன் | J/V.G.H.S | Tam | 83 | 54 |
| J/2601/B | தர்மிகா தவராசா | J/V.G.H.S | Tam | 83 | 54 |
| J/2209/B | தேவகுமார் மதுமிலன் | J/J.H.C | Eng | 83 | 54 |
| J/2221/B | அபிராமி சந்திரகுமார் | J/V.G.H.S | Tam | 82 | 61 |
| J/2202/B | மதுரங்கி தேவகுமார் | J/V.G.H.S | Eng | 82 | 61 |
| J/2403/B | கிருஜிகா ராஜேந்திரகுமார் | J/H.F.C | Tam | 81 | 63 |
| J/1449/M | நிரோசனா கருணாநிதி | J/A.C.C | Tam | 81 | 63 |
| J/2082/B | சிவகரன் பிரகாஷ் | J/K.H.C | Tam | 81 | 63 |
| J/1117/M | தியாகராசா திருமால் | J/J.H.C | Tam | 81 | 63 |
| J/1500/M | விநாயகமூர்த்தி சனந்தன் | J/J.H.C | Tam | 81 | 63 |
| J/1078/M | ஜயாத்துரை சிவாம்சன் | J/M.C | Tam | 80 | 69 |
| Kn/2128/B | டிலக்சியா சுரேஷ் | Kn/K.M.V | Tam | 80 | 69 |
| J/2134/B | கவிப்பிரியா கனகேஸ்வரன் | J/M.V.C.C | Tam | 80 | 69 |
| J/2076/B | கிருஸ்ணமூர்த்தி யிசாகரன் | J/S.S.C | Tam | 80 | 69 |
| J/2236/B | லக்ஷிகா நடேஸ்வரன் | J/C.G.C | Tam | 80 | 69 |
| J/2310/B | நடராஜன் நிரஞ்சன் | J/J.H.C | Eng | 80 | 69 |
| J/1048/M | பிரேம்குமார் சாருஜனன் | J/J.H.C | Tam | 80 | 69 |
| J/2320/B | சடாட்சரன் கீதசபா | J/J.H.C | Eng | 80 | 69 |
| Mu/1615/M | சஜானுஷா ஜெயராஜா | Mu/C.M.V | Tam | 80 | 69 |
| J/2250/B | சங்கீதா குமரகுரு | J/V.J.C | Tam | 80 | 69 |
| J/2074/B | சிவபாலன் செந்தூரன் | J/S.S.C | Tam | 80 | 69 |
| J/1155/M | ஸ்ரீஸ்காந்தராஜா துஷ்யந்தன் | J/J.H.C | Tam | 80 | 69 |
| J/2335/B | கமீலியா யுவிற்றன் | J/V.G.H.S | Tam | 79 | 81 |
| J/1112/M | கேசவி அரவிந்தன் | J/V.G.H.S | Tam | 79 | 81 |
| J/1065/M | குகதாசன் டிலக்சன் | J/J.H.C | Tam | 79 | 81 |
| J/2329/B | லதாங்கினி கணேசராசா | J/V.G.H.S | Tam | 79 | 81 |
| J/2334/B | பாஸ்கரன் பார்த்தீபன் | J/J.H.C | Tam | 79 | 81 |
| J/2371/B | பவித்திரா இளங்குமரன் | J/V.G.H.S | Eng | 79 | 81 |
| J/1345/M | சிவபரன் சிவகஜன் | J/J.H.C | Tam | 79 | 81 |
| J/2262/B | சிவப்பிரியா சிவனேசன் | J/V.G.H.S | Eng | 79 | 81 |
| J/2201/B | சுகுமார் செந்தூர | J/J.H.C | Eng | 79 | 81 |
| J/2339/B | தர்சனா விசுவாசம் | J/V.G.H.S | Tam | 79 | 81 |
| J/2113/B | தர்மிகா ஸ்கந்தராஜா | J/V.G.H.S | Tam | 78 | 91 |
| J/2442/B | காயத்திரி ஆனந்தன் | J/V.G.H.S | Tam | 78 | 91 |
| J/2722/B | கௌதமி கௌரிதாசன் | J/C.G.C | Tam | 78 | 91 |
| J/2360/B | ஜோலின்நிவாஷனா தவநாயகம் | J/V.G.H.S | Tam | 78 | 91 |
| J/1222/M | சுந்தரேஸ்வரன் சாயிசங்கர் | J/J.H.C | Eng | 78 | 91 |
| J/1063/M | தேவமனோகரன் ஜயபவன் | J/J.H.C | Tam | 78 | 91 |
| J/2536/B | தேவசாயினி சிவதாசன் | J/V.G.H.S | Eng | 78 | 91 |
| J/1151/M | திருவரங்கன் நகுல்ராஜ் | J/V.C | Tam | 78 | 91 |
| J/1329/M | அன்ரன்சியோன் சிந்துஜன் | J/S.P.C | Tam | 77 | 99 |
| J/2568/B | அசோதா அரியராசா | J/V.G.H.S | Tam | 77 | 99 |
| J/1013/M | பபிஷலா மயூரநாதன் | J/C.G.C | Tam | 77 | 99 |
| J/1007/M | சாம்பவி பாலசுந்தரம் | J/V.G.H.S | Eng | 77 | 99 |
| J/1377/M | டிலக்ஷா ஜெயக்குமார் | J/V.G.H.S | Tam | 77 | 99 |
| J/1122/M | இலங்கேஸ்வரன் மதிலஜனன் | J/K.H.C | Tam | 77 | 99 |
| J/2085/B | கதிர்காமநாதன் சாயிந்தன் | J/K.H.C | Tam | 77 | 99 |
| J/5214/M | கீதப்பிரியா மனோகரன் | J/K.H.C | Tam | 77 | 99 |
| J/2081/B | நவராசா சங்கீர்த்தனன் | J/K.H.C | Tam | 77 | 99 |
| Mn/2496/B | ராயகோன் கிறிஸ்வின் | Mn/S.X.B.C | Tam | 77 | 99 |
| J/2426/B | இராமேஸ்வரன் பிரதீஸ் | J/J.H.C | Eng | 77 | 99 |
| J/1474/M | தவநாதன் டியூக்சன் | J/S.P.C | Tam | 77 | 99 |
| J/2483/B | விவேகானந்தம் அஜித் | J/J.H.C | Tam | 77 | 99 |
| J/2346/B | விஜயதேவன் துவாரகன் | J/J.H.C | Tam | 77 | 99 |
| J/2141/B | யதுசா ரகுநாதன் | J/V.G.H.S | Eng | 77 | 99 |
| J/2020/B | அபிராமி கனகசபை | J/V.G.H.S | Tam | 76 | 114 |
| J/1450/M | அக்ஷயா வீரசிங்கம் | J/V.G.H.S | Tam | 76 | 114 |
| J/1193/M | கிறிஸ்துராசா கிறிஷான் | J/S.P.C | Tam | 76 | 114 |
| J/1503/M | கஜானி பாலபவான் | J/V.G.H.S | Eng | 76 | 114 |
| J/2211/B | நிரஞ்சன் மயூரேஷ் | J/J.H.C | Eng | 76 | 114 |
| J/1152/M | இராசதுரை கரன் | J/V.C | Tam | 76 | 114 |
| J/2575/B | தாக்ஷாயினி இராஜசேகரன் | J/V.G.H.S | Tam | 76 | 114 |
| J/2167/B | தமிழினி பிரிம்றூபன் | J/J.H.L.C | Tam | 76 | 114 |
| J/1204/M | மகேந்திரன் ரவிந்திரஷங்கர் | J/J.H.C | Eng | 76 | 114 |
| J/2610/B | தர்ஷனா ரவிந்திரன் | J/J.H.L.C | Tam | 76 | 114 |
| J/5306/B | டயானி சிவகுமார் | J/V.G.H.S | Tam | 75 | 124 |
| J/2012/B | எட்வின் ஜோய்விதுஷன் | J/S.J.C | Tam | 75 | 124 |
| J/1132/M | ஈழநிலா தயாளன் | J/V.G.H.S | Tam | 75 | 124 |
| J/1223/M | கமலநாதன் மாலவன் | J/S.J.C | Eng | 75 | 124 |
| J/1156/M | புவனயோகேஸ்வரன் லக்ஸ்மன் | J/J.H.C | Tam | 75 | 124 |
| J/1212/M | இராஜேந்திரன் அட்சயன் | J/J.H.C | Eng | 75 | 124 |
| J/2604/B | றிஷாந்தி கேதீஸ்வரன் | J/C.G.C | Eng | 75 | 124 |
| Mu/1097/M | சிவலோகநாதன் சுஜிதரன் | Mu/P.C.C | Tam | 75 | 124 |
| J/1375/M | சுரேஷ்வரன் ரவிநாத் | J/J.H.C | Eng | 75 | 124 |
| J/2299/B | தாட்சாயினி கதிர்காமநாதன் | J/J.H.L.C | Tam | 75 | 124 |
| J/1238/M | தர்சிகா சௌந்தரராஜா | J/V.G.H.S | Tam | 75 | 124 |
| J/2546/B | தவமோகன் அருந்தவன் | J/J.H.C | Tam | 75 | 124 |
| J/2224/B | துளசினி சிவஞானம் | J/V.G.H.S | Tam | 75 | 124 |
| J/2191/B | துஷியந்தி தனபாலசிங்கம் | J/V.C | Tam | 75 | 124 |
| J/2311/B | விஜயதாஸ் விதுர்ஷன் | J/S.J.C | Eng | 75 | 124 |
| J/1115/M | வேலதஞ்சன் கிருஷ்ணகிஷோர் | J/K.H.C | Tam | 75 | 124 |
| J/1144/M | வசந்தகுமார் கஜானன் | J/J.H.C | Tam | 75 | 124 |
| J/1125/M | யோகேஸ்வரன் துளசியன் | J/K.H.C | Tam | 75 | 124 |

# எழுக தமிழ் எழுச்சிப் பேரணி




















தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நல்லூர், யாழ். பல்கலையிலிருந்து முற்றவெளி வரை....







யாழ்ப்பா



தமிழ் மக்கள்
யாழ்ப்பாணத்
காக வடக்கு
கடையடைப்ப



# …தரவு தெரிவித்து பூரண கடையடைப்பு







வடமராட்சி

…ாழ்ப்பம்








…மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் …ல் இடம்பெற்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக் … வடகிழக்கு மாகாணங்களில் பல பகுதிகளில் பூரண …மேற்கொள்ளப்பட்டது....


படங்கள்:- உ.சாளின், பொ.சோபிகா, கோபி, மகாலிங்கம், சரவணன்




உப்புமடம்


சுன்னாகம்


கோண்டாவில்





முட்டாஸ் கடை


மருதனார்மடம்



குளப்பிட்டி







திருநெல்வேலி


உரும்பிராய் சந்தி

# எவரும் எவரையும் ஏமாற்ற முடியாது!

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

**எவரும் எவரையும் ஏமாற்ற முடியாது. யாரும் யாரிடமும் ஏமாறப் போவதுமில்லை. யாரையும் யாரும் ஏமாற்றி ஒருமுறையான அரசியல் சாசனத்தை உருவாக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

மாகாண சபைகளுக்கு பாரியளவு அதி காரங்கள் பகிர்ந் தளிக்கப்பட வேண்டும். இவ்வாறு பகிர்வதன் மூலமே மாகாண அமைச்சுக்கள் தங்கள் அதிகாரங்களுக்கு உட்பட்ட மக்க ளுக்கான சேவைகளை பூரணமாகச் செய்ய முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியல் தீர்வு இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் எல்லா இன மதத்தவர்களுக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பாகும்.

எவரையும் எவரும் ஏமாற்றி ஒருமுறையான அரசியல் சாசனத்தை பெற முடியாது. சுருக்கமாகச் சொல்வதென்றால் எவரும் எவரையும் ஏமாற்றவில்லை.

எவரும் எவரையும் ஏமாற்றுவதன் மூலமாக ஒரு திருப்திகரமான, நியாயமான, நிரந்தரமான, நிதானமான அரசியல் தீர்வை நாம் அடைய முடியாது.

உருவாக்கப்படவுள்ள அரசியல் தீர்வு மக்கள் முன் சர்வசன வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்படும். அந்த அரசியல் சாசனம் மக்களின் ஆணையைப் பெற்ற பின்பு தான் அமுலுக்கு வரும். நிறைவேற்றப்படும்.

இத்தகைய சூழ்நிலையில் நாம் எல்லோரும் பக்குவமாகவும் நிதானமாகவும் நடக்க வேண்டிய காலத்தின் தேவை காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தலைமை பதவியிலிருந்து விலகினார் ஓமல்பே தேரர்

ஜாதிக ஹெல உறுமயவின் தலைமை பதவியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் வண. ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.



நேற்று முன் தினம் சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற 13 ஆவது கட்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதனடிப்படையில் புதிய தலைவராக வண. ஹெட்டிகல விமலசார தேரர் மற்றும் பிரதியமைச்சர் கருணாசேன பரண விதாரண நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பொதுச் செயலாளராக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் பதவி வகிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

# வாசனைத் திரவியங்களை கட்டுப்படுத்த புதிய சட்டம்

ஆண்கள் மற்றும் பெண்கள் பயன்படுத்தும் வாசனைத் திரவியங்கள் தொடர்பான சட்டமொன்றை விரைவில் கொண்டுவரவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரமொன்றை விரைவில் அமைச்சரவையில் முன்வைக்கவுள்ளதாக மருந்துப் பொருட்கள் விநியோகப் பிரிவின் பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் கமல் ஜயசிங்க தெரிவித்தார். தற்பொழுது தரமில்லாத வாசனைத் திரவியங்கள் சந்தையில் காணப்படுவதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளதாகவும் டாக்டர் கமல் தெரிவித்தார்.

சந்தையிலுள்ள வாசனைத் திரவியங்களைப் பெற்றுக் கொள்ளும்போது நுகர்வோர் அவதானமாக இருக்குமாறும் டாக்டர் கமல் ஜயசிங்க கேட்டுள்ளார். (இ-7)

# பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட பட்ஜெட்

நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்குடன் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதே இந்த வரவு செலவுத் திட்டத்தின் நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத் தயாரிப்புக்காக திருகோணமலை மக்களின் கருத்துக்களைப் பெறும் நடவடிக்கையில் கலந்து கொண்ட போதே ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## வழி சொல்பவர்களுக்குச் சில குறிப்புக்கள்

ஏனுங்க சாந்தி காலனிக்கு எப்படிங்க போகணும்? இப்படிக் கேட்பவர்களுக்கு -

தெரியாது என்று அலட்சியமாகப் பதில் சொல்பவர்கள் ஓர் ரகம்.

அதோ தெரியுது பாருங்க.

தென்னை மரம்! அதுக்கு ரைட்ல போய், மறுபடியும் லெப்டல போனா ஒரு புளிய மரம் வரும். அங்கேயிருந்து நேராப்போய் ரைட்ல... என்று வழி கேட்பவர்களைக் குழப்புபவர்கள் ஓர் ரகம்.

ஒன்றுமே சொல்லாமல் செவிட்டு ஆசாமி மாதிரித் திரும்பிக் கொள்கிறவர்கள் வேறு ரகம்.

உறுதியாகத் தெரிந்து கொள்ளாமல் நேர் எதிர்த் திசையைக் காண்பிக்கிறவர்கள் வேறு ரகம்.

இந்த நான்கு பிரிவைச் சேர்ந்தவர்களாக நாம் இருக்கக் கூடாது என்பது மிக முக்கியம்.

தெரியாதா? சரி தவறில்லை!

நானும் உங்களைப் போல இந்தப் பகுதிக்குப் புதுசுங்க என்று ஒரு சிறு புன்னகையுடன் பதில் சொல்வது பண்பான செயல். அல்லது நாம் சரியாகத் தெரியலிங்க என்று சொல்லலாம். வழி சொல்லாத போதும் நம்மீது வழி கேட்பவர்களுக்கு நன்மதிப்பு ஏற்படும். தெரியவில்லை என்று சொல்லக் கூடாது. ஒரு மனிதப் பண்புக்கேனும் பக்கத்திலுள்ள கடைக்காரரை ஏங்க இவங்க கேக்கிற சாந்தி காலனி எங்கே இருக்கு என்று கேட்டுச் சொல்லலாமே!

ஒருவேளை வழி தெரியும், ஆனால் வெகு தூரம் என்று வைத்துக் கொண்டால் லெப்டு ரைட்டு லெப்டு என்று என்.சி.சி. பாணியில் கமண்ட் செய்யாமல் பாதி தூரத்தில் உள்ள ஓர் அடையாளத்தைச் சொல்லி அங்கே கேட்டால் சரியாகச் சொல்வார்கள் என்று சொல்லி அனுப்ப வேண்டும். புளிய மரம் என்றும் தென்னை மரம் என்றும் அடையாளம் சொல்லாமல் பால் டெப்போ, தியேட்டர், மளிகைக் கடை, கோயில் போன்ற பலரும் அறிந்த அடையாளங்களாகச் சொல்ல வேண்டும். அநாகரிகமாகக் கத்தாமல் வந்து பொறுமையாகச் சொல்ல வேண்டும். கேட்டுக் கொண்டவரின் முகக் குறிப்பை உணர முயன்று, முடிந்தால் இரண்டாவது முறை சொல்ல வேண்டும்.

யார் வீட்டுக்குப் போக வேண்டும்? என்று கேட்பது அநாகரிகம். இதை வீட்டு எண்ணைக் கூடக் கொண்டு வராதவர்களிடம் மட்டுமே கேட்கலாம்.

மேலை நாடுகளில் சிலர் வெகு தூரம் கூட வந்து வழி காண்பிப்பவர்கள் உண்டு. அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் வழி தெரியாமல் தடுமாறுபவர்களுக்கு வழி காண்பிப்பது மிக உருப்படியான காரியம். ஒரு நல்ல மனதிற்கு மனநிறைவைத் தரும் விடயமும் கூட. வழி கேட்டுப் பயன் அடைபவர்களும் மனதிற்குள் வாழ்த்துவதோடு அட இந்தக் காலத்திலும் இப்படிப்பட்டவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்று வியந்து போவார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# ஈராக்கில் கார்க் குண்டு தாக்குதலில் 18பேர் பலி!

## ஐ.எஸ். பொறுப்பேற்பு

(பக்தாத்)

ஈராக் நாட்டின் திக்ரித் நகரில் நேற்று முன்தினம் பொலிஸ் சோதனைச் சாவடி மீது தீவிரவாதிகள் நடத்திய கார் குண்டு தாக்குதலில் 18 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

ஈராக்கில் ஐ.எஸ்.தீவிர வாதிகள் வசம் இருந்த திக்ரித் நகரம் கடந்த ஆண்டு (2015) ஏப்ரல் மாதம் மீட்கப் பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அந்த நகரம் மீது ஐ.எஸ். தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்தினார்கள். திக்ரித்தில் உள்ள சோதனை சாவடிக்கு வாகனங்களில் வந்த தீவிரவாதிகள் அங்கு பாதுகாப்பில் இருந்த இராணுவ வீரர்களை சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர்.

அதில் 5 ராணுவ அதிகாரிகள் உயிரிழந்தனர். மேலும் அங்கு நின்று கொண்டிருந்த 2 பொது மக்களும் பலியாகினர். உடனே அங்கிருந்த பொலிஸார் சுட்டதில் தீவிரவாதி ஒருவன் கொல்லப்பட்டான்.

திக்ரித் நகரில் இருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் மேலும் 2 தீவிரவாதிகள் தாங்கள் சென்ற வாகனத்தில் நிரப்பியிருந்த குண்டுகளை வெடிக்க செய்தனர்.

அதில் 11 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 3 பேர் இராணுவ வீரர்கள். இவர்கள் ஷியா பிரிவை சேர்ந்தவர்கள். இவர்கள் தவிர 21 பேர் காயம் அடைந்தனர். இந்த 2 தாக்குதல்களிலும் மொத்தம் 18 பேர் பலியாகி உள்ளனர். இத்தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.(இ-7)

# கிளர்ச்சியாளர்கள் முகாம் இராணுவத்தினரின் வசம்

(அலெப்போ)

அலெப்போவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் அமைந்துள்ள Handarat முகாமிற்குள், சிரிய படையினர் நுழைவது தொடர்பான காணொலியை இராணுவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்டுள்ளது.

இந்த முகாம் உள்ள பகுதி அரச படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதை அடுத்து, அங்கிருந்த கிளர்ச்சியாளர்கள் பின்வாங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதி வழியாக அலெப்போவிற் கான முக்கிய நெடுஞ்சாலையொன்று அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அலெப்போவில் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் முனைப்புடன் அமுல்படுத்தப்பட்டுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைவிடப்பட்டுள்ளதை, கடந்த வியாழக்கிழமை முதல் அங்கு தொடரும் மோதல்கள் பறைசாற்றுகின்றன.

குறித்த மோதல்களில் 12 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் தொடர்ச்சியாக விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கும் கிளர்ச்சியாளர்கள், பெரும்பாலும் ரஷ்ய போர் விமானங்களே தாக்குதல் நடத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அலெப்போவில் கிளர்ச்சியாளர்களின் தீவிர முற்றுகைக்குட்பட்டுள்ள பகுதிகளில் 2 இலட்சத்து 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் சிக்கியுள்ளனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (இ-7)

# வடகொரியா வான் சாகச நிகழ்வு; ஐக்கிய நாடுகள் சபைக்கு சவால்!

(பியாங்கியாங்)

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கும் தென் கொரியாவிற்கும் சவால் விடும் வகையிலான செய்தியை தெரிவிக்கும் வகையில் வட கொரியா, கிழக்கு கரையோர நகரமான வொன்சனில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வான் சாகச நிகழ்வு ஒன்றை நடத்தியுள்ளது.

'வொன்சன் வான் சாகச நிகழ்வு - 2016' எனப் பெயரிடப்பட்ட குறித்த நிகழ்வில் பங்குகொண்ட விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள், கால்மா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் சிவில் விமானங்களுடன் இராணுவ போர் விமானங்களும் பங்கேற்றதாகக் கூறப்படுகின்றது.

வட கொரியாவின் ஐதரசன் அணுகுண்டு சோதனையை அடுத்து ஐ.நா. பாதுகாப்பு சபை வட கொரியா மீது தடை விதித்தமையைத் தொடர்ந்து, கடந்த ஏப்ரல் மாதம் வட கொரியாவின் ஒரேயொரு நெருங்கிய நட்பு நாடாக விளங்கிய சீனா விமான எரிபொருள் மற்றும் ஏனைய மசகு எண்ணெய் பொருட்களின் ஏற்றுமதிக்கு தடை விதித்திருந்தது.

இந்நிலையில், எவ்வாறான தடைகளை ஏற்படுத்தினாலும் தங்களை கட்டுப்படுத்த முடியாது என்ற செய்தியை தமது எதிர்த்தரப்பினருக்கு தெரிவிக்கும் நோக்கிலேயே குறித்த வான் சாகச நிகழ்வை வட



கொரியா பாரிய அளவில் ஒழுங்கு செய்திருந்ததாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# 35 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் சீனாவில் பிரமாண்ட சுற்றுலா பூங்கா

(ஷாங்காய்)

சீனாவில் ரூ.35 ஆயிரம் கோடி ரூபா மதிப்பில் சுற்றுலா பூங்கா திறக்கப்பட்டுள்ளது.

சீனாவின் மேற்கு பகுதியில் உள்ள ஹெபே நகரில் மிகப்பிரமாண்டமான சுற்றுலா பூங்கா திறக்கப்பட்டுள்ளது. இது 160 ஹெக்டேயர் நிலப்பரப்பளவில் அமைந் துள்ளது.

'ஹெபே வாண்டா சிட்டி' என பெயரிடப்பட்டுள்ள இந்த பூங்காவில் கேளிக்கை பூங்கா, ஹோட்டல்கள் மற்றும் வணிக



வளாகங்கள் உள்ளன.

டாலியன் வாண்டா குரூப் நிறுவனம் இதை உருவாக்கியுள்ளது. இந்த சுற்றுலா பூங்கா அமைக்க ரூ.35 ஆயிரம் கோடி செலவிடப்பட்டுள்ளது. இந்த சுற்றுலா பூங்காவின் உரிமையாளர் வாங் ஜியாங்லின். சீனாவில் உள்ள கோடீஸ்வரர்களில் இவரும் ஒருவர்.

சீனாவின் ஷாங்காய் நகரில் கடந்த ஜூன் மாதம் ரூ.45 ஆயிரம்கோடி செலவில் வேல்ட் டிஸ்னி நிறுவனம் சுற்றுலா பூங்கா அமைத்துள்ளது.

தனது தொழில் போட்டி எதிரியான வேல்ட் டிஸ்னிக்கு போட்டியாக இதை உருவாக்கியுள்ளதாக வாங் ஜியாங்லின் தெரிவித்தார். (இ-7)

# பாகிஸ்தானில் போர் விமானம் விழுந்து விபத்து;விமானி பலி

பாகிஸ்தானில் வடமேற்கு பகுதியில் விமானப்படைக்கு சொந்தமான எப்-7 போர் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் விமானி பலியானார்.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் அந்த நாட்டின் விமானப்படைக்கு சொந்தமான எப்-7 ரக போர் விமானம் நேற்று முன்தினம் வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டு இருந்தது.

ஜாம்ருட் நகர் அருகே கைபர் கணவாய் நுழைவு வாயில் அருகே சென்றபோது திடீரென விமானம் விழுந்து நொறுங்கியது.

இதில் அமர் ஷாஜத் என்ற விமானி உயிரிழந்தார். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்துமாறு இராணுவம் உத்தரவிட்டுள்ளது. கடந்த 1 1/2 ஆண்டுகளில் பாகிஸ்தானில் பல விமான விபத்துக்கள் நடந்துள்ளன. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த விமான விபத்தில் பெண் விமானி ஒருவரும், 2015 ஆம் ஆண்டு நடந்த இராணுவ ஹெலிகொப்டர் விபத்தில் நோர்வே, பிலிப்பைன்ஸ் நாடுகளின் தூதுவர்கள் உட்பட 7 பேர் பலியானதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மெக்சிக்கோ நாட்டு எண்ணெய் கப்பலில் பயங்கரத் தீ விபத்து!

மெக்சிக்கோ நாட்டுக்கு சொந்தமான பெமெக்ஸ் பெற்றோலிய நிறுவனத்தை சேர்ந்த எண்ணெய் கப்பலில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் ஆயிரக் கணக்கான லீற்றர் பெற்றோல் மற்றும் டீசல் பீப்பாய்கள் வெடித்து சிதறின.

மெக்சிகோ நாட்டுக்கு சொந்தமான பெமெக்ஸ் பெற்றோலிய நிறுவனத்தை சேர்ந்த 'பர்கோஸ்' என்ற எண்ணெய் கப்பல் நேற்று முன்தினம் கோட்ஸாகோல்கோஸ் துறை





முகத்தில் இருந்து வெராகுரூஸ் துறைமுகம் நோக்கி டீசல் மற்றும் பெற்றோல் பீப்பாய்களை ஏற்றியபடி மெக்சிக்கோ வளைகுடா வழியாக சென்று கொண்டிருந்தது.

வெராகுருஸ் மாநிலத்தில் உள்ள போக்கா டெல் ரியோ கடலோரப் பகுதியை நெருங்கியபோது அந்த கப்பலில் திடீரென தீ பிடித்தது. கப்பலில் இருந்த பணியாளர்கள் தீயை அணைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஆனால், அந்த கப்பலில் 70 ஆயிரம் பீப்பாய்களில் பெற்றோலும், 80 ஆயிரம் பீப்பாய்களில் டீசலும் இருந்ததால் தீபிடித்த பீப்பாய்கள் வெடித்து சிதறியதால் கப்பலின் முன்பகுதி முழுவதும் தீயில் எரிந்து நாசமானது. அதில் இருந்த 31 பணியாளர்களும் அவசர உதவி படகுகள் மூலம் கப்பலில் இருந்து வெளியேறினர். (இ-7)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

26 09.2016

- 1255 - அசிசியின் புனித கிலாராவுக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.
- 1580 - சேர் பிரான்சிஸ் டிரேக் உலகைச் சுற்றி வந்தார்.
- 1777 - பிரித்தானியப் படைகள் பிலடெல்பியா நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றினர்.
- 1783 - மாசசூசெட்சில் ஆயுதக் கிளர்ச்சி ஷேய்சின் கிளர்ச்சி ஆரம்பம்.
- 1934 - ஆர்.எம்.எசு. குயீன் மேரி நீராவிக் கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: மார்கெட் கார்டன் நடவடிக்கை தோல்வியடைந்தது.
- 1950 - ஐக்கிய நாடுகள் படைகள் வட கொரியாவிடமிருந்து சியோல் நகரை மீண்டும் கைப்பற்றினர்.
- 1950 - இந்தோனேசியா ஐநாவில் இணைந்தது.
- 1954 - ஜப்பானில் இடம்பெற்ற புயலில் சிக்கி கப்பல் ஒன்று மூழ்கியதில் 1,172 பேர் கொல்லப்பட்டனர்.
- 1960 - பிடெல் காஸ்ட்ரோ சோவியத் ஒன்றியத்துக்கான தமது ஒத்துழைப்பை அறிவித்தார்.
- 1962 - ஜேமன் அரபுக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1984 - ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கை சீனாவிடம் கையளிக்க ஒப்புக் கொண்டது.
- 1987 - தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் லெப்டினன் கேணல் திலீபன் இந்திய அமைதிப் படையிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நீரும் அருந்தா உண்ணாநோன்பு இருந்து உயிர் துறந்தார்.
- 1997 - இந்தோனேசிய விமானம் மெடான் அருகே விபத்துக்குள்ளாகியதில் 234 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997 - இத்தாலியில் இடம்பெற்ற நிலநடுக்கம் அசிசியின் பிரான்சிசு தேவாலயத்தின் ஒரு பகுதியைச் சேதப்படுத்யது.
- 2002 - செனெகல் நாட்டு கப்பல் ஒன்று காம்பியாவில் மூழ்கியதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.
- 2007 - வியட்நாமில் பசாக் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுக்கொண்டிருந்த பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 60 தொழிலாளர்கள் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

**பிறப்புகள்**

- 1820 - ஈஸ்வர சந்திர வித்யாசாகர், இந்திய மெய்யியலாளர், ஓவியர் (இ. 1891)
- 1833 - சார்ல்ஸ் பிராட்லா, ஆங்கில அரசியல்வாதி. (இ. 1891)
- 1849 - இவான் பாவ்லோவ், நோபல் பரிசு பெற்ற உருசிய மருத்துவர் . (இ. 1936)
- 1867 - வின்சர் மெக்கே, அமெரிக்க ஓவியர் . (இ. 1934)
- 1890 - பாபநாசம் சிவன், கருநாடக இசை அறிஞர் . (இ. 1973)
- 1897 - ஆறாம் பவுல் (திருத்தந்தை) .(இ. 1978)
- 1908 - பெரியசாமி தூரன், கருநாடக இசை அறிஞர். (இ. 1987)
- 1913 - திருக்குறள் வீ.முனிசாமி, தமிழறிஞர். (இ. 1994)
- 1923 - தேவ் ஆனந்த், இந்திய நடிகர். (இ. 2011)
- 1932 - மன்மோகன் சிங், இந்தியாவின் 14வது பிரதமர்
- 1965 - பெத்ரோ பொரொசென்கோ, உக்ரைனின் 5வது அரசுத்தலைவர்.
- 1979 - டாவி ரோயிவாசு, எசுத்தோனியாவின் 1வது பிரதமர்.
- 1981 - செரீனா வில்லியம்ஸ், அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை.

**இறப்புகள்**

- 1954 - தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி. (பி. 1876)
- 1959 - எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, இலங்கை பிரதமர . (பி. 1899)
- 1987 - திலீபன், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர். (பி. 1963)
- 2010 - குளோரியா ஸ்டுவர்ட், அமெரிக்க நடிகை. (பி. 1910)

# தியாகி திலீபன்



திலீபன் எனும் பெயரில் அறியப்படும் இராசையா பார்த்தீபன் (நவம்பர் 27, 1963 - செப்டெம்பர் 26, 1987) தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு ஆரம்பகால உறுப்பினரும் முக்கிய உறுப்பினராகவும் இருந்தவராவர். இவர் யாழ்ப்பாணம், ஊரெழுவைச் சேர்ந்தவர்.

இந்தியாவிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா விரதம் இருந்து, அக்கோரிக்கைகள் நிறை வேற்றப்படா சமயம் உறுதியுடன் அவ் உண்ணாவிரதத்தில் உயிர் துறந்தவர்.

இவரை இந்திய அரசு இறக்க விட்டது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையே பின்னர் ஏற்பட்ட போருக்கு ஒரு முக்கிய காரணம்.

1987 செப்டெம்பர் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன் கேணலாக, யாழ்.மா வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் வீரச்சாவடைந் தார்.



# சிறுவர் அரங்கம்

# குரங்கும் ஒற்றுமையற்ற பூனைகளும்

ஒரு நாள் இரண்டு பூனைகள் சேர்ந்து ஒரு வீட்டிலிருந்து ஒரு அப்பத்தை எடுத்தன. அந்த அப்பத்தைச் சாப்பிடுவதற்காக இரண்டாகப் பிரிக்கும் போது ஒரு பூனை, அப்பம் சரி சமமாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று மற்றப் பூனையுடன் சண்டையிட ஆரம்பித்தது.

இரண்டு பூனைகளும் சண்டை பிடித்துக் களைத்துப் போயின. அதனால் தொடர்ந்து சண்டை பிடிக்காமல், யாரிடமாவது சென்று அப்பத்தைப் பங்கிடுவோம் என்று தீர்மானித்தன.




அதனால் இரண்டு பூனைகளும், அப்பத்தைப் பங்கு பிரிப்பதற்காக ஒரு குரங்கிடம் சென்றன. குரங்கும், அப்பத்தைச் சமமாகப் பிரிக்க ஒரு தராசை எடுத்து வந்தது.

அப்பத்தை இரண்டாக வெட்டித் தராசின் ஒவ்வொரு தட்டிலும் ஒவ்வொரு துண்டை வைத்து நிறுத்துப் பார்த்தது. தராசின் ஒரு தட்டு கீழே தாழ்ந்தது.

அப்பொழுது குரங்கு, அந்தத் தட்டில் இருந்த அப்பத் துண்டை எடுத்து ஒரு கடி கடித்துத்தான் சாப்பிட்டு விட்டு மீதியை தட்டில் போட்டது. இப்பொழுது, மற்றத் தட்டுக் கீழே தாழ்ந்தது.

அந்தத் தட்டிலிருந்த அப்பத்தையும் குரங்கு எடுத்துக் கடித்து விட்டுத் தட்டில் போட்டது.

இப்படியே தட்டுகள் மாறி மாறித் தாழ்ந்தன. குரங்கும் மாறி மாறி அப்பத் துண்டுகளைக் கடித்துக் கடித்துச் சாப்பிட்டுக் கொண்டே இருந்தது.

இப்படியே அப்பம் குறைவதை பார்த்த பூனைகள், தங்கள் தவறை உணர்ந்து பங்கு பிரிக்க வேண்டாம் நாங்களே பார்த்துக் கொள்கிறோம் என்று மீதமுள்ள அப்பத்தைத் தரும்படி கேட்டன. ஆனால் குரங்கு, மீதமுள்ள அப்பம், தான் இது வரை செய்த வேலைக்குக் கூலி, என்று சொல்லி விட்டு அதையும் வாயில் போட்டுக் கொண்டது.

ஒற்றுமையற்ற பூனைகள் வெட்கத்துடனும் வேதனையுடனும் திரும்பிச் சென்றன.

குழந்தைகளே! ஒரு பூனையாவது கொஞ்சம் விட்டுக கொடுத்திருந்தால இத்தனை நஷ்டம் ஏற்பட்டிருக்குமா? விட்டுக் கொடுத்தல் பிறரிடம் நமக்கு நல்ல பெயரை வாங்கிக் கொடுக்கும, இறைவனுக்கும் அதுவே பிடிக்கும்.

# பௌத்தத்திற்கு வழங்கப்பட்ட முன்னுரிமையை மாற்றுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர் - மகிந்த

(கொழும்பு)

**அரசியலமைப்புச் சட்டத்தில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை மாற்ற சிலர் முயற்சிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.**

போர் வெற்றிக்கு பின்னர் உருவாக்கப்பட்ட இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு தற்போது அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

உடத்தும்பர பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே முன்னாள் ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

எமக்கு முன்னால் மிகப் பெரிய அச்சுறுத்தல் உள்ளது. அந்த அச்சுறுத்தல் என்ன?

அரசியலமைப்பை மாற்றும் தேவை சிலருக்கு உள்ளது. அரசியலமைப்பை மாற்றி பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள விசேட முன்னுரிமையை எம்மிடம் இருந்து பறிக்கும் தேவை இவர்களுக்கு இருக்கின்றது.

நாட்டை விடுவித்து ஒருமைப்பாடுள்ள நாட்டை எம்மால் உருவாக்க முடிந்தது. அந்த ஒருமைப்பாட்டுக்கு தற்போது அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தில் ஒற்றையாட்சி என்ற வார்த்தையை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக வேறு வார்த்தைகளை சேர்த்து அதிகாரத்தை பரவலாக்கலாம்.

இதனால் ஏற்பட போகும் கெடுதியான பிரதிபலன்கள் குறித்து மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

நாட்டில் நடப்பவை குறித்த தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்குள்ளது.

எம்மை திட்டுவதற்காகவோ அல்லது விமர்சிப்பதற்கோ அன்று நாட்டில் என்ன நடக்கின்றது என்பது வெளிப்படையாக இருந்தது.

உலகில் என்ன நடக்கின்றது என்பதை அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு இருக்கின்றது.

அந்த உரிமை தற்போது நம்மிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளது எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

## மகிந்தானந்தவின் மகன் கைது

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவின் மகன் கனிஷ்க பண்டார பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடிபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## நாடாளுமன்றில் மகிந்த தரப்பினர் தகாத வார்த்தைப் பிரயோகம்

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் நடத்தைகள் தொடர்பில் வரைவு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு ஆறு மாதங்களாகியும் இன்னும் அது நிறைவேற்றப்படவில்லை.

இந்தநிலையில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்துக்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனையடுத்து இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய எச்சரித்துள்ளார்.

கடந்த நாடாளுமன்ற அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது அமைச்சர் சரத் பொன்சேகாவை, மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் "நாட்டாமி" ( மூடை சுமப்பவன்) என்று கோசித்தனர்.

இதன்போது பிரயோகிக்கப்பட்ட தகாத வார்த்தைகளை அடுத்து சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் திலங்க சுமதி பால, அடுத்த பேச்சாளரை உரையாற்றுமாறு அழைப்பு விடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தெற்கு அதிவேக வீதியில் விபத்து; ஐந்து பேர் வைத்தியசாலையில்

தெற்கு அதிவேக வீதியில், பின்னந்துவ நுழைவாயில் அருகாமையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஐவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலி தொடக்கம் கொழும்பு வரை பயணித்த கார் ஒன்றும் ஆட்டோ ஒன்றும் மோதியதிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில், ஆட்டோவில் பயணித்த 5 பேரும் காயப்பட்ட நிலையில் கராப்பிடிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 853

சிந்து





தர்சி




கார்த்திநாதன்




பிரபாகரன்




றொக்




சர்மி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கைவிடப்பட்ட காணிகளை பெறும் விண்ணப்பங்களை பெற அறிவுறுத்து

(ஏறாவூர்)

பயங்கரவாத கால கட்டத்தின்போது அச்சுறுத்தலுக்கு மத்தியில் விற்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட சொந்தக் காணிகளை மீளப்பெறுவதற்கான கால அவகாசத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிவித்தலில் 1983 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் பயங்கரவாத அச்சுறுத்தலினால் தமது சொந்தக் காணிகளை கைவிட்டவர்கள் அல்லது மிகக் குறைந்த விலையில் உயிர் அச்சுறுத்தலின் காரணமாக காணிகளை விற்றவர்கள் தங்களது காணிகளை மீளப் பெறுவதற்கான விஷேட சட்டமூலம் இவ்வருடம் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்விஷேட சட்டமூலம் 2 வருடங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும் என்பதால் இவ்வாறான பாதிப்புக்குள்ளானவர்கள் தங்களது காணிகளை மீளப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கைகளை மிக விரைவாக எடுக்க வேண்டியுள்ளது.

இதனடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களின் தகவல்களை திரட்டி சட்ட ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குகின்ற ஏற்பாடுகள் மிக விரைவாக செய்யப்படவிருப்பதால் இதற்கான விண்ணப்பப்படிவத்தினை காத்தான்குடியிலுள்ள எனது காரியாலயத்திலிருந்து பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# கிழக்கு கல்வித்துறை அபிவிருத்தி; முதலமைச்சர்-அதிகாரிகள் சந்திப்பு

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தில் கல்வித்துறை அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளை வினைத்திறன் மற்றும் விளைதிறனுள்ளதாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் கல்வித்துறை அதிகாரிகளுடனான சந்திப்புக்களை கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் நடத்தி வருகின்றார்.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி அதிகாரிகளுடனான சந்திப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய இடங்களில் இச்சந்திப்புக்கள் இடம்பெற்றன.

கல்வி அபிவிருத்திக்காக வருடாவருடம் ஒதுக்கப்படும் நிதிகளை ஆக்கபூர்வமான நீடித்து நிலைக்கக் கூடிய திட்டங்களுக்காக வினைத்திறன் மற்றும் விளை திறனுடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இச்சந்தியோர் இச்சந்திப்புகளில் கலந்து கொண்டு தங்களின் நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகளின் தேவைகளையும், குறைகளையும் எடுத்துக்கூறினர்.



திப்பில் கிழக்கு முதலமைச்சர் கல்வித்துறை அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் ஆகி உடனடியாக பூர்த்தி செய்யக் கூடிய தேவைகளை உடன் நிறைவேற்றித் தருவதற்கு முதலமைச்சர் அதிகாரிகளைப் பணித்தார்.

இந் நிகழ்வுகளில் மாகாணக் கல்விப்பணிப்பாளர் எம்.ரி.ஏ. நிஷாம் உடனிருந்தார். (செ)




# கிழக்கிலுள்ள 1,108 பாடசாலைகளில் 5 ஆயிரத்து 21 ஆசிரிய வெற்றிடங்கள் கிழக்கு முதலமைச்சர் தகவல்



கிழக்குமாகாணத்திலுள்ள ஆயிரத்து 108 பாடசாலைகளில் 5 ஆயிரத்து 21 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கு சகல கோட்டப் பாடசாலைகளுக்கும் நேரடி விஜயம் மேற்கொள்ளும் நடவடிக்கையின் 2ஆம் நாளாகிய நேற்றுமுன்தினம் முதலமைச்சரின் ஏறாவூர் காரியாலயத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 5 ஆயிரத்து 21 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆனால் அதனை வெளிப்படுத்தாது மறைக்கப்பட்டுள்ளதனை நான் அறிந்து அதிகாரிகளுக்கு அது சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளேன்.

ஆனால் அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து இம்முறை வெளியாகியுள்ள கல்வியியற்கல்லூரி ஆசிரியர்களை கிழக்கு மாகாணத்துக்கே நியமிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளேன்.

கிழக்கில் பாரிய ஆளணித் தட்டுப்பாடு காணப்படுகிறது. கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் விட்டதவறினால இன்று அவைகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒருங்கிணைத்துச் செல்ல வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு ஆயிரத்து 134 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதுபோல் இன்று 5 ஆயிரத்து 21 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ளன.

கல்விப் பணிப்பாளரின் தகவலின்படி இன்று ஆரம்பப் பிரிவுக்காக 279 ஆசிரியர்களும் கணிதப் பிரிவுக்காக 411 ஆசிரியர்களும் ஆங்கிலத்துக்காக 365 ஆசிரியர்களும் விஞ்ஞானத்துக்காக 36 ஆசிரியர்களும் இதர பாடங்களுக்குமாக இவ்வெற்றிடங்கள் இருக்கின்றன.

அத்துடன் பாடசாலைகளுக்கு என்றும் இல்லாதவாறு இவ்வருடம் பாரிய நிதிகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த நிதிகளின மூலம் நீடித்து நிலைக்கக் கூடிய திட்டங்களை வினைத்திறன் மற்றும் விளைதிறனுடன் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# முன்னறிவித்தல் இன்றி நீர் வெட்டு; பாவனையாளர்கள் அசௌகரியம்

(திருகோணமலை)

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மூதூர் கிளையினால், கடந்த ஒரு வார காலமாக எவ்வித முன்னறிவித்தலுமின்றி நீர் வெட்டப்படுவதால் நீர் பெறுவதில் பாவனையாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக மூதூர் பிரஜைகள் குழுவின் தலைவர் சிவசிறி இ.பாஸ்கரன் குருக்கள் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது வரட்சியான காலப்பகுதி என்பதால் கிணறுகளில் நீர் இல்லாது காணப்படுகிறது. மூதூர் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை எவ்வித முன்னறிவித்தலுமின்றி நீரைத் தடை செய்வதால் முன்கூட்டியே நீரைச் சேமித்து வைக்க முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே, இனிமேல் நீர்த்தடை செய்கின்ற போது மூதூர் பிரதேசத்திலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் முன்னறிவித்தலை வழங்க, மூதூர் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

# பேருந்து விபத்து; 9பேர் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்ற தனியார் பேருந்தொன்று, நிக்கவெவ பகுதியிலுள்ள வளைவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில், படுகாயமடைந்த ஏழு பெண்கள் உட்பட ஒன்பது பேர், அநுராதபுரம், ஹொரவப பொத்தானை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் 7.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் படுகாயமடைந்த ஒன்பது பேர் ஹொரவப் பொத்தானை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அதில் ஏழு பேர், மேலதிக சிகிச்சைகளுக்காக, அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக வைத்தியசாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு விபத்துக்குள்ளானவர்கள் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள் எனவும் திருகோணமலையிலுள்ள தமது உறவினர்களைப் பார்த்துவிட்டு வீட்டுக்கு திரும்பும் போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார், பேருந்தில் 18 பேர் பயணித்ததாகவும் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஹொரவப் பொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ)

# இரு சிறுவர்கள் விபத்தில் பலி!

(திருகோணமலை)

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வநகர் பகுதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெற்ற இவ்விபத்தில், தோப்பூர், செல்வநகர் நூறா வீட்டுத் திட்டம் பகுதியைச் சேர்ந்த 15-16 வயதுடைய இரு சிறுவர்களே உயிரிழந்துள்ளனர்.

குறித்த மோட்டார் சைக்கிளில் மூன்று பேர் பயணித்ததாகவும் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் மற்றையவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார், சடலம் மூதூர் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

விபத்தின் பின்னர் டிப்பர் சாரதி தப்பியோடியுள்ளதாகவும் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் சேருநுவர பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (செ)

# பொலிஸ் ரோந்து சேவை ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால், அவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் வழிகாட்டல் வசதிகளை வழங்கும் நோக்கோடு, சுற்றுலா பொலிஸ சைக்கிள் ரோந்து சேவை, மட்டக்களப்பு பொலிஸாரினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தினந்தோறும் பி.ப. 2 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து பாலமீன்மடு வெளிச்சவீடு வரை ஒரு சேவையும், இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரையும் இரு ரோந்து சேவைகளும் நடத்தப்படவுள்ளதாக தலைமையகப் பொலிஸ்பொறுப்பதிகாரி சி.ஜ.ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (செ)

# உப தபால் நிலையம் விரைவில் திறக்கப்படும்

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு - தும்பங்கேணி - தாந்தாமலை கிராமத்தில் மக்களின் நன்மை கருதி விரைவில் உப தபால் காரியாலயம் திறக்கப்பட இருப்பதாக பட்டிருப்பு தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும் வணிகத்துறை அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகருமான சோ.கணேசமூர்த்தி, நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்தார்.

பிரதேச மக்கள் தங்களின் தேவைகளை தபால் நிலையத்தின் ஊடாக பெறுவதற்கு வேறு பிரதேசங்களுக்கு செல்ல வேண்டிய நிலையில், அப்பிரதேச மக்களின் நன்மை கருதி கடந்த வெள்ளிக்கிழமை அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீமின் அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இப்பிரதேசத்தில் புதிய தபால் காரியலயம் ஒன்றினை திறப்பதற்கு உத்தரவளித்ததாகவும் இது சம்பந்தமாக தபால்மா அதிபரிடம் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு வேண்டியதாகவும் அவர் குறிப்பிட்டார். (செ)

# வடக்கு சர்வதேச விமான நிலையம்

# பலாலி சாத்தியமில்லை

# வேறு இடத்தைத் தெரிக!



மேலே படத்தில் காண்பது மாலைதீவில் தலைநகர் மாலேயின் சர்வதேச விமான நிலையத்தையே. இதிலிருந்து விமான நிலையம் ஒன்றுஅமைக்க இடம் பெரிய பிரச்சினை இல்லை என்பதை நீங்களே புரிந்துகொள்ளலாம்.

அண்மையில் பாராளுமன்றத்தில் விமானப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்த ஒரு கருத்து. பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக இந்தியாவுடனோ வேறு எந்தத் தரப்புடனுமோ அரசு எந்த ஒப்பந்தமும் செய்யவில்லை. மற்றும் பலாலி விமான நிலையத்தை தரமுயர்த்தும் எந்த திட்டமும் அரசிடம் இல்லை எனத் தெரிவித்தார்.

ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் பலாலி விமான நிலையத்தை மேம்படுத்துவது தொடர்பில் இந்தியாவுடன் ஒப்பந்தம் ஏதாவது செய்யப்பட்டுள்ளதா? என்ற கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சரால் மேற்கண்டவாறு தெரிவிக் கப்பட்டது.

இதற்கு முன்னர் இந்திய நிறுவனம் ஒன்றிடம் பலாலியை பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்துவது தொடர்பில் செயற்றிட்டம் தயாரிக்க 2 கோடி ரூபாய் பெறுமதிக்கு வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியானதையடுத்தே மேற்படி விடயம் பாரா ளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

இவ் விவாதத்தின் போதும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்தக் கருத்தும் தெரிவிக்காது மௌனமாகவே இருந்தனர்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் சிறு சிறு பிரச்சினைகள் அதாவது பேசி புரிய வைத்து தீர்க்கக்கூடிய பிரச்சினைகளைக்கூட அவர்கள் பேசுவதில்லை. இனப்பிரச்சினை போன்றவற்றில் தங்களை மறைத்துக் கொண்டு மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகளை தீர்க்காமல் தப்பித்துக் கொள்கின்றனர்.

இது இவ்வாறு இருக்க பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யபோகின்றோம் என யுத்தம் முடிந்து கடந்த 7 ஆண்டுகளாக பல்வேறு தரப்பினராலும் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக இல்லை, பிராந்திய விமான நிலையமாக இல்லை, உள்ளூர் விமான நிலையமாகவே மேம்படுத்தப்படப் போகிறது என மாறிமாறி எமது அரசியல்வாதிகளால் தெரிவிக்கப்படுகிறது.

சில மாதங்களுக்கு முன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு சந்திப்பில் பலாலி விமான நிலையம் வேண்டுமா? மயிலிட்டி துறைமுகம் வேண்டுமா? மீள்குடியேற்றம் வேண்டுமா? என்பதை அந்த மக்களே தீர்மானிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

எமது அரசியல்வாதிகளும் முடிவு எடுக்கமுடியாமல் குழம்பும் அல்லது தெரிந்துகொண்டே குழப்பும் பல பிரச்சினைகள் போல இதையும் கையிலெடுத்து பேய்க் காட்டுகிறார்கள்.

வடக்கிற்கு ஒரு விமான நிலையம் வேண்டும். அது இரத்மலானையில் இருந்து இங்கு வந்து இறங்க வல்ல. கொழும்பில் இருந்து சிங்கப்பூருக்கான விமானக் கட்ட ணத்திலும் பார்க்க கொழும்பு-யாழ்ப்பாணம் பயணக் கட்டணம் அதிகம். இதையெல்லாம் நாம் பொருட்படுத்துவதே இல்லை. இவ்வாறுதான் எமது பணம்-பொருளாதாரம் சுரண்டப்படுகிறது.

வெளிநாடுகளில் இருந்து இலங்கை வருவோரில் தலைநகர் கொழும்புக்கு பிறகு அதிகளவானோர் யாழ்ப்பாணத்திற்கே வருகிறார்கள்

அதிலும் நல்லூர் திருவிழா காலமான ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் யாழ்ப்பாணத்திற்கு இலட்சக்கணக்கானோர் வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

அவர்கள் குறித்த நாடுகளில் இருந்து கட்டுநாயக்க வருவதற்கு எடுக்கும் கால விரயத்தை விட அங்கிருந்து யாழ்ப்பாணம் அல்லது ஏனைய தமது வடபகுதி வதி விடத்திற்கு வருவதற்காக அதிகமான நேரத்தையும் சிரமத்தையும் எதிர்கொள்கிறார்கள்.

இதைவிட எமது வாகனச் சாரதிகளிடம் உயிரைக் கொடுத்து விட்டே அவர்கள் தமது வதிவிடங்களை வந்து சேர்கிறார்கள்.

இதைக் கவனமெடுத்து வட பகுதியில் ஒரு சர்வதேச விமான நிலையம் ஒன்றை அமைக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

இதன் மூலம் வடக்கின் பொருளாதாரம் வளர்ச்சியடையும்.

ஆனால் ஒரு சர்வதேச விமான நிலையம் வட பகுதியில் அமைப் பது அவ்வளவு சுலமபமல்ல. காரணம் அதற்குத் தேவையான பணம் தான் பிரச்சினை என்று யாரும் நினைக்காதீர்கள். அதற்கு அரசுக்கு மனம் வர வேண்டும்.

இலங்கையின் 2-வது சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்ட மத்தள ஒன்றும் பொருளாதார கேந்திரமோ அல்லது அரசியல், கலாசார முக்கியத்துவமான பிரதேசமோ கிடையாது.

அங்கு அமைக்க அப்போதைய மகிந்த ராஜபக்ச அரசு விரும்பியது. அதனால் விமான நிலையம் அமைப்பதற்கு பௌதிக சாத்தியம் கூட இல்லாத பிரதேசமான அம்பாந்தோட்டையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தனது பிறந்த இடம் என்ற ஒரே காரணத்திற்காக சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டது.

இதேபோல் சிறிய மீன்பிடி துறைமுகம் கூட அமைக்க முடியாத அம்பாந்தோட்டையில் மாகம்புரவில் துறைமுகம் அமைக்கப்பட்டது. ஆனால் இத்துறைமுகம் இப்போது ஓரளவு வெற்றிகரமாக இயங்குகிறது.

இதிலிருந்து தெரிவது பெரிய செயற திட்டம் ஒன்றை நிறைவேற்ற அரசு மனப்பூர்வமாக விரும்ப வேண்டும்.

இல்லாவிட்டால் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி மக்களை அரசு ஏமாற்றும்.

**ஆகவே வட மாகாண அரசு தெளிவாக ஒன்றைக் கூற வேண்டும்.**

வலி. வடக்கில் மீள்குடியேற்றத்தை மட்டும் செய்யுங்கள்.

விமான நிலையம் அமைக்க பரந்த வட மாகாணத்தில் பல இடங்கள் உண்டு.

பூநகரி அல்லது தீவகம் ஏதாவது ஒரு பொருத்தமான இடம் இதுதான் எனத் தெரிவு செய்து அறுதியிட்டு தெரிவியுங்கள்.

யாழ். குடாநாட்டைவிட பரப்பளவில் சிறிய சிங்கப்பூரில் ஒன்றுக்கு மேற்பட்ட சர்வதேச விமான நிலையம் மற்றும் 8 உள்ளூர் விமான நிலையங்களும் உள்ளன.

நாம் ஒரு விமான நிலையம் அமைக்கப் படும் பாடு இருக்கிறதே!

வடபகுதி மக்களுக்குத் தேவையான சர்வதேச விமான நிலையத்தை பொதுமக்களின் காணிகளில் அமைக்காமல், கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கக்கூடிய பூநகரிப் பிரதேசத்தில் அமைப்பது சிறந்ததொரு செயற்பாடாக அமையும்.

அதேநேரம் இங்கும் பலாலி மக்கள் விவசாயம் செய்கின்ற - செய்யக்கூடிய நிலமாகவே அந்த நிலம் இருக்கின்றது. இங்குள்ள நிலம் என்பது மக்களுக்கு அதிகளவிலான வருமானத்தை ஈட்டிக் கொடுக்கக் கூடியது. ஈதேபோன்று மயிலிட்டி துறைமுகம் என்பது மீன்பிடிக்கான சிறந்த இடம். ஆகவே இந்த இடங்களைப் பிடித்து வைத்து அதில் சர்வதேச விமான நிலையமாக மாற்ற வேண்டுமென்ற எந்த அவசியமும் இல்லை.

பலாலியை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவோமாக இருந்தால் பல பாதிப்புக்கள் ஏற்படலாம்.

பூநகரியை எடுத்துக் கொண்டால் பூநகரி வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் செல்லக்கூடிய வீதிப் போக்குவரத்துக்கள் இருக்கின்றன.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தற்போது குடிசன நெரிசல் அதிகரித்து வருகின்றது. இதனால் அடுத்து பத்து வருடத்திற்குள் வாகனங்களும் அதிகரிக்கும். இதனையடுத்து வாகனப் போக்குவரத்து என்பது அதிகரித்து மிக நெரிசலை ஏற்படுத்தும்.

பலாலி விமானநிலையம் தொடர்பில் கடந்த 15 வருடங்களுக்கு முன்பாகவே யாழ். பல்கலைக்கழக துணை வேந்தராக இருந்த பேராசிரியர் துரைராஜாவால் முன்மொழியப்பட்டது.

குறிப்பாக பலாலி விமான நிலையத்தை பூநகரியில் உள்ள கௌதாரி முனை வினாசிஓடை, மண்ணித்தலை போன்ற பரந்த நிலப்பரப்பில் அமைக்கமுடியும்.

இத்தகைய இடங்களில் விமான நிலையம் அமைக்கும் போது வடக்கு கிழக்கிற்கான மத்திய நிலையமாகவும் யாழ்ப்பாணத்தில் இருந்து மண்ணித்தலைக்கு 300 மீற்றர் வரை பாலம் அமைப்பதன் ஊடாகவும் ஏற்கெனவே கேரதீவு சங்குப்பிட்டி பாதை இருக்கிறது.

இதன்மூலம் மன்னாரில் இருந்து வருபவர்களுக்கு மட்டக்களப்பு, திருகோணமலையில் இருந்து வருபவர்களுக்கு முல்லைதீவின் ஊடாக வருவதற்கு ஆரம்பத்தில் இருந்தே ஆய்வு செய்யப்பட்டது. குறிப்பாக முன் னாள் பேராசிரியர் துரைராஜா மண் தொடர்பான ஆய்வை மேற் கொண்டே இந்த ஆய்வை முன்வைத்தார்.

இதுகூட நெருக்கடி ஏற்படுமானால் ஊர்காவற்துறை பகுதியில் உள்ள சுருவில் பகுதி பரந்த பகுதியாகவும் தட்டையானதும் கல்பூமியாகவும் காணப்படுகிறது.

இந்த இடத்திலும் விமான நிலையத்தை அமைப்பது சாலப்பொருத்தமாகும் என்ற விடயமும் அன்று ஆராயப்பட்டது. அதற்கான காரணம் அராலித் துறை பாலம் அமைக்கும் போது 15 நிமிடத்திலும் செல்ல முடியும்.

அதேபோல் பண்ணைப் பாலத்திற்கும் செல்ல முடியும். அதேபோல் மண்டைதீவிற்கும் கௌதாரமுனைக்கும் ஏற்படுத்தும் பாதைகூட மிக விரைவாக தீவுப் பகுதிக்கு செல்ல முடியும்.

இவ்வாறு ஊர்காவற்துறை சுருவில் பகுதியில் விமான நிலையம் அமையும்போது தீவகம் முழுமையாக அபிவிருத்தி அடையும். அங்கு மீள்குடியேற்றம், விவசாயம் அதிகரிக்கும்.

பூநகரி அடையாளம் காணப்பட்டது பூநகரி, சுருவில் பகுதிகளில் விமான நிலையம் அமைப்பது காலத்தின் தேவையாக இருக்கும்.

இல்லாவிட்டால் வட மாகாண சபை நிபுணர்களின் ஆதரவுடன் பொருத்தமான இடத்தை தெரிவு செய்ய வேண்டும்.


ஆனால் இதுவும் கடந்த சில மாதங்களாக வட மாகாண சபை சச்சரவுப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் (வெறும் 20 கோடி ரூபாய் பெறுமதியான) அமைப்பதற்கான இடத்தை தெரிவு செய்வதற்கான குடுமிச் சண்டைபோல் ஆகிவிடக் கூடாது.

ஆகையால் வடமாகாண சபை குறித்த இடத்தை உடனடியாக தெரிவு செய்து இதுதான் இடம் என மத்திய அரசுக்கும் சர்வதேசத்திற்கும் அறிவித்தால் அதற்கு உதவ எல்லோரும் தயாராகவே உள்ளனர்.

## பணவைப்பு மீளப்பெறல் இயந்திரங்கள் அறிமுகம்

வழமையான ஏரிஎம் மற்றும் பண வைப்பு இயந்திரங்களின் பயன்பாட்டுக்கு மேலதிகமாக சிறப்பியல்புகளைக் கொண்ட முன்னேற்றகரமான புதிய தலைமுறை நிதிக் கொடுக்கல்வாங்கல் இயந்திரங்களை கொமர்சல் வங்கி அறிமுகம் செய்துள்ளது.

இந்த இயந்திரம் படிப்படியாக தனது 251 கிளைகளிலும் அறிமுகம் செய்யப்படும்என வங்கி அறிவித்துள்ளது.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,494.86 | 6,479.21 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,581.38 | 3,587.35 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா. மில்.) 2,292.060

[illegible] பெஸ்ட் கப்பிரல்(31.50), டுனாமிஸ் கப்பிரல்(25.40), சிஐஎப்எல்(1.00), மேர்சன்ட் பாங்(14.80), பிறவுண்ஸ் பீச்(27.40).

சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.): ஜே.கே.எச்(W)( 2.90), கலமசு(1,100.00), ஹெல்சே(47.30), பாம் காடின் ஹோட்.(32.20), அமானா தகபுல்(0.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 144.19 | 147.98 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 187.61 | 194.11 |
| யூரோ (ஐரோ. ஒன்றியம்) | 160.54 | 166.74 |
| சுவிஸ் பிராங் | 147.70 | 153.69 |
| கனேடிய டொலர் | 109.61 | 114.05 |
| அவுஸ்திரேலிய டொலர் | 109.09 | 114.06 |
| சிங்கப்பூர் டொலர் | 105.70 | 109.39 |
| ஜப்பான் யென் | 1.41 | 1.47 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.18 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.72 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# உலக மருந்தாளர் தினம்

2009 ஆம் ஆண்டு இஸ்தான்புல் நகரத்தில் இடம் பெற்ற FIP congress இன் (International Pharmaceu tical Federation) சபைக் கூட்டத்தில் துருக்கி மருந் தியலாளர் சங்கத்தினால் உலக மருந்திய லாளர் தினமொன்றை பிரகடனப்படுத்தி அதனை வருடந் தோறும் கொண்டாட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பீட்டது. இக் கருத்தினை ஏற்றுக்கொண்டு 2010ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் செப்டெம்பர் 25ஆம் திகதி உலக மருந்தியலாளர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதியினை உலக மருந்திய லாளர் தினமாக பிரகடனப்படுத்தக் காரணம் 1912 ஆம் ஆண்டு இதே திகதியில் தான் FIP என்ற அமைப்பு தோற்றம் பெற்றுள்ளது.

2010 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்ட உலக மருந்திய லாளர் தினத்தின் கருப்பொருளாக (Theme) 'Safety first with medicine ask your pharmacist' என்ற வாசகம் குறிப்பிட்டுள்ளது. இதன்படி மருந்துப் பாவனையின் போது பாதுகாப்பு முதலிடம் பெறுகின்றது. இது பற்றி உங்களது மருந்தாளரிடம் கேட்கலாம் என்ற தொனிப்பொருளில் அமைந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து வருடாவருடம் ஒவ்வொரு தனித்துவமான கருப்பொருளை முன்வைத்து மருந்தியலாளர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்த வருடத்தின் கருப்பொருள் pharmacist caring For You FIP இன் தலைவர் Dr. Carmen pena அறிவித்துள்ளார்,

மருந்தாளரின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் பற்றிப் பார்ப்போமாயின்,

❖ அந்தந்த நாட்டுச் சட்டதிட்டங்களுக்கு அமைவாக மருத்துவ விதிகள், கோட்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும். இலங்கை மருந்தாளராயின் இலங்கை ஔடத அதிகார சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடக்க வேண்டும்.

❖ மருந்தாளராவனவர் ஒழுக்கமானவராகவும் நேர்மையுள்ளவராகவும் அர்ப்பணிப்பு நிறைந்தவராகவும் தனது மருத்துவச் சேவையை வழங்க வேண்டும்.

❖ வைத்தியரினால் வழங்கப்படும் மருந்துச் சீட்டினை (prescription) பரிட்சித்து அரச அங்கீகாரம் பெற்ற வைத்தியரினால் எழுதப்பட்டதா என உறுதிப்படுத்தி மருந்துகளை உரிய மருத்துவ ஆலோசனைகளுடன் வழங்க வேண்டும்.

❖ மருத்துவ நிலையமொன்றில் மருத்துவரின் பரிசோதிக்கப்பட்டு வீடு செல்லும் தறுவாயில் மருந்துகளை பெற இறுதி நபர் மருந்தாளராவார். எனவே அவரின் மருத்துவ சேவை நோயாளியின் நோய் பூரணமாக குணமாவதில் பிரதான பங்களிப்புச் செய்கிறது. எனவே அவர் தனது மருத்துவ சேவையினை சரிவர இந்த சமூகத்திற்கு செய்ய வேண்டும்.

இத்தகைய அளப்பெரிய சேவையை வழங்கும் மருத்தாளர்கள் போற்றுதற் குரியவர்கள். எனவே அவர்களின் பணி மென்மேலும் சிறக்கவும் அவர்களின் சேவை அனைவருக்கும் கிடைக்கவும் எமது ஒத்துழைப்பினை அவர்களுக்கு வடமாகாணத்தில் வட இலங்கை மருந்திய லாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பணியாற்றி வருகிறது.

இந்த உலக மருந்திய லாளர் தினத்தை கொண்டாடிக் கொண்டிருக்கும் வடமாகாண மருந்தியலாளர்களுக்கும் எமது இனிய மருந்தியலாளர் தின நல்வாழ்த்துக்களை வட இலங்கை மருந்தியலாளர் சங்கம் தெரிவித்துக் கொள்கிறது.

நடராசா ராசநேரு

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 140 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 50 | 80 | 120 |
| தக்காளி | 80 | 100 | 50 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 50 | 65 | 80 | 80 |
| கோவா | 80 | 100 | 50 | 100 | 80 |
| கரட் | 120 | 100 | 70 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 20 | 50 | 60 |
| புடோல் | 50 | 40 | 20 | 50 | 60 |
| வாழைக்காய் | 80 | 50 | 50 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 90 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 65 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 150 | 80 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 40 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 50 | 100 | 60 | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 90 | 120 | 140 |
| பீற்றூட் | 50 | 50 | 30 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 100 | 70 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 200 | 60 | 160 | 120 |
| போஞ்சி | 160 | 200 | 110 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 30 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-30 | 40 | 20-35 |
| இராசவள்ளி | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 100 | — | 100 | 140 | 160 |
| முள்ளங்கி | 60 | — | 25 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | — | 10 | 30 | 40 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 |
| ஈரப்பலா | — | — | 30 | 60 | 80 |

# ஒரு சிகரெட்டின் விலை 46 ரூபா



அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் வரி அதிகரிப்பினால் சிகரெட் ஒன்றின் விலை 11 ரூபா அதிகரிக்கப்படும் என சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி ஒரு சிகரெட்டிற்கு. வற் வரி 15 வீதமும் மேலும் 5 ரூபாவும் அறவிடப்படவுள்ளது. தற்பொழுது சந்தையில் 35 ரூபாவாக காணப்படும் ஒரு சிக ரெட்டின் விலை 46 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. அரசாங்கத்தினால் கொண்டு வரப்படவுள்ள புகையிலை வரி இந்த விலை அதிகரிப்புடன் நேரடியாக தொடர்புபடுவதாக குறிப்பிடப்படுகின்றது. இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## இளைய தலைமுறை நடிகர்களுடன் 259

## ஜெமினிகணேசன்

சுற்றி இருப்போரின் பேச்சைக் கேட்டு எடுப்பார் கைப் பிள்ளையாகச் செயற்பட்ட இவள் பிராப்தம் வீடுகள் ஒரே படத்தில் தனக்கிருந்த வீடுகள் எல்லாவற்றையும் அடமானம் வைத்து இழந்தாள். அபிபுல்லாசாலையில் இருந்த மூன்று வீடுகளும் பறிபோயின. கொடைக்கானல் வீடுகள் மட்டும்தான் குழந்தைகள் பெயரில் இருந்ததால் எஞ்சியது.

பிரிவு தாங்காமல் தூக்க மாத்திரை சாப்பிட என்னைக் காப்பாற்ற ஓடி வந்தது என் வைத்திய நண்பர்கள் தான்.

ஆனால் சாவித்திரி அந்த வைத்தியர்களால் கூடக் காப்பாற்ற முடியாத நிலையில் கண் மூடினாள். அவள் உடலை என் நுங்கம்பாக்கம் வீட்டுக்குத் தான் எடுத்து வந்தோம். அவளுக்குத் தாலி கட்டிய கையால் இறுதிச்சடங்கையும் செய்து அனுப்பி வைத்தேன்.

எங்கள் வாழ்க்கையின் ஞாபகமாகப் பிறந்த விஜய சாமுண்டீஸ்வரிக்கு என்னைத் தவிக்க விட்டு திருமணம் செய்து வைக்க அவளுக்கு மனமிருந்தது. ஆனால் அவள் என்னை விட்டுப் போன பின்னும் ஒரு பாவமும் அறியாத எங்கள் மகன் சதிஷை யாருமற்ற அநாதையாய் விட்டுவிட எனக்கு மனமில்லை. எங்கள் நுங்கம் பாக்கம் வீட்டில் அடியெடுத்து வைத்த அவனை பாப்ஜியும் ஏற்றுக் கொண்டு வளர்த்தாள்.

பள்ளிப்படிப்பும் முடிந்த பின் அவனை பெங்களூரில் என்ஜினியரிங் கல்லூரியில் சேர்த்தேன். கணிப்பொறி விஞ்ஞானத்தில் சிறந்த என்ஜினியராகப் படித்த அவன் இன்று கம்ப்யூட்டர் கம்பனியில் நல்ல வேலையில் இருக்கிறான். அப்பா என்ற முறையில் என்னைப்பற்றி அவன் தெரிந்து கொண்டதும் புரிந்து கொண்டதும் சாவித்திரியின் மறைவுக்குப்பின் தான். இன்று அவன் என்னோடு மணிக் கணக்கில் பேசக்கூடிய நண்பன்.

இவ்வாறு ஜெமினிகணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இளைய தலைமுறை நடிகர்களுடன் இணைந்ததும் ஜெமினிகணேசன் சிறப்பாக நடித்துள்ளார்.



1975ஆம் ஆண்டுக்கு பிறகு ஜெமினிகணேசனுக்கு சினிமா வாய்ப்புக்கள் குறையத் தொடங்கின.

ஜெமினிகணேசன் நடித்து 1976இல் உனக்காக நான், இதய மலர், 1977இல் நாம் பிறந்த மண், 1978 இல் ஸ்ரீகாஞ்சிகாமாட்சி, 1979இல் ஞானக்குழந்தை ஆகிய படங்களே வெளிவந்தன.

கமலஹாசனுடன்

அதன் பிறகு சூரக்கோட்டை சிங்கக்குட்டி, ஒப்பந்தம், நெஞ்சோடு நெஞ்சம் ஆகிய 3 படங்களிலும் 1988 இல் உன்னால் முடியும் தம்பி, 1989 இல் பொன்மனச்செல்வன், 1992 இல் தாய்மொழி, 1994இல் வீர மணி, 1996இல் அவ்வை சண்முகி, மேட்டுக்குடி, 1998 இல் நாம் இருவர் நமக்கு இருவர், கொண்டாட்டம் ஆகிய படங்கள் வெளிவந்தன. இவற்றில் "உன்னால் முடியும் தம்பி", "அவ்வை சண்முகி" இந்த 2 படங்களும் குறிப்பிடத்தக்கவை.

களத்தூர் கண்ணம்மாவில் ஜெமினியுடன் குழந்தை நட்சத்திரமாக நடித்த கமலஹாசன் கதாநாயகனாக நடிக்க அவருடன் ஜெமினி தோன்றிய படம் "உன்னால் முடியும்" தம்பி கவிதாலயா புரொடக்ஷன் தயாரிப்பில் கே.பாலசந்தர் இயக்கிய படம்.

(தொடரும்)

அனுகுண்டின் முன் அஞ்சாத நிற்பவன்.
அன்பு கலந்த வார்த்தைக்கு அஞ்சுவான்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வலிமை மிகு தியாகத்தை யாராலும் தோற்கடிக்க முடியாது!

தியாகி திலீபனின் 29–வது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். தமிழினத்தின் வாழ்வுக்காக ஊண் உறக்கம் மறந்து தன்னுயிரை ஆகுதியாக்கிய ஒரு தியாகியின் எண்ணங்கள், சிந்தனைகள், நோக்கங்கள் ஒருபோதும் வீண்போகாது என்பது சர்வநிச்சயம்.

ஒரு காலத்தில் இந்திய தேசத்தின் விடுதலைக்காக மகாத்மா காந்தி உண்ணா நோன்பு இருந்தார். அந்தத் தியாகம் பாரத தேசத்துக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தது.

பிரித்தானியக் காலனித்துவத்துக்கு எதிராக சத்தியவழியில் போராடிய காந்தியின் சிலை இன்று பிரித்தானிய மண்ணில் நிறுவப்பட்டுள்ளது.

எந்த நாட்டுக்கு எதிராக மகாத்மா காந்தி நாற்பது நாட்கள் உண்ணாவிரதம் இருந்தாரோ அந்த நாடு இன்று காந்தியின் உருவச் சிலையை தன் நாட்டில் நிறுவி காந்தியத்துக்கு – அகிம்சைக்கு மதிப்பளித்துள்ளது.

மகாத்மா காந்திக்கு இப்போது பிரித்தானியா வழங்கிய கௌரவத்தை அன்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

ஆனால் இன்று மகாத்மா காந்தியின் உருவச் சிலை இலண்டனில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாயின் அதற்குள் இருக்கக் கூடிய ஆன்மிக தத்துவங்கள், தியாகத்தின் பெறுமதிகள் என்பவற்றை நாம் உணர்ந்தாக வேண்டும்.

இதே போன்றுதான் தியாகி திலீபனின் தியாகமும் இந்த இலங்கை மண்ணில் என்றோ ஒரு காலத்தில் போற்றப்படும். இந்த நாட்டின் தென்பகுதியில் கூட தியாகி திலீபனின் சிலை நிறுவப்படும். பாடப் புத்தகங்களில் திலீபன் என்ற தியாகியின் வரலாறு இந்த நாட்டின் மாணவர்களால் படிக்கப்படும்.

இதை நாம் இப்போது கூறும் போது இது நடக்கக் கூடிய விடயமா? என்று பலரும் கேட்கலாம். ஆனால் என்றோ ஒரு காலத்தில் நாம் கூறிய மேற்போந்த விடயங்கள் நடந்தேயாகும்.

இதைச் சொல்லும் போது இதற்கு ஏதேனும் சான்றாதாரங்கள் உண்டா? என்று கேள்வி எழுப்பப்படலாம்.

இதற்கான பதில் மௌனமாகவே இருக்கும். ஆனால் உலகில் எந்தத் தியாகமும் வீண்போனதாகச் சரித்திரம் இல்லை. அதேபோல எந்த நடிப்புகளும், போலித்தனங்களும் நீண்ட காலம் நிலைத்ததான வரலாறுகளும் இல்லை.

தியாகி திலீபனின் தியாகத்தை இந்த நாட்டின் அனைத்து மாணவர்களும் கற்கின்ற காலம் வருகின்றபோது இப்படியொரு தியாகி இருந்தாரா? என்று கேள்வி எழுப்பும் அந்த மாணவர்கள், அந்தத் தியாகியின் தியாகத்தை இலங்கை ஆட்சியாளர்கள் போற்றத் தவறியது மகா தவறு என்றும் குற்றம் சாட்டும். ஆக, தியாகி திலீபன் காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்ற பெருமை எமக்குரியது.

எவராலும் நினைக்க முடியாத தியாகம். அதிலும் தன் தமிழ் மக்கள் வாழ வேண்டும். அவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்காக தன்னுயிரை ஆகுதியாக்க வேண்டும் என்று நினைப்பும் அந்த நினைப்பை நினைவுபடுத்துவது என்பதும் சாதாரணமானவர்களால் நினைத்துக்கூட பார்க்க முடியாத விடயமாகும்.

அந்தளவிற்கு திலீபனின் தியாகம் போற்றுதலுக்குரியது. எதிர்காலத்து சந்ததி இப்படியொரு தியாகத்தை யாரும் செய்ய முடியுமா? என்று கேட்கின்ற அளவில் தியாகி திலீபனின் தியாகம் போற்றப்படும்; வழிபடப்படும். இது உண்மை.

ஒட்டுமொத்தத்தில் தூய சிந்தனையுடன் கூடிய தியாகங்கள் ஒருபோதும் தோற்றுப் போவதில்லை. அவை உயிர்ப்புப் பெற்று நீடூழி வாழ்பவை. அந்த உயிர்ப்புக்கு முற்பட்ட காலம் உயிர்ப்புக்கான உறங்கு நிலையாகவே இருக்கும்.

# இலங்கையில் பாரிய நிதி நெருக்கடி; பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதாக பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வேகமாக அரசாங்க கடன் அதிகரித்தல், பாரிய நிதிப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டு நாணய வீழ்ச்சி ஆகியவைகள் இந்த நிலைமைக்கு காரணமாகியுள்ளன.

எதிர்வரும் வருடம் செலுத்த வேண்டிய 4.5 பில்லியன் டொலர் மற்றும் அதற்கு அடுத்த வருடம் செலுத்த வேண்டிய 4 பில்லியன் டொலரை செலுத்த அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

சுங்கம் மற்றும் வருமான வரித்துறை திணைக்கள ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட நேரத்திற்கு வேலை என்ற தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாக வருவாய் சேகரிப்பு நடவடிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமையினால் திறைசேரிக்கு பண சுழற்சி முகாமைத்துவ நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் காரணமாக நாள் ஒன்றுக்கு ஒரு பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பண சுழற்சி குழு மற்றும் நிதி அமைச்சர் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## நியாயமான கோரிக்கைகளை புறக்கணிப்பது வெட்கப்படவேண்டிய விடயம்- வைத்தியர்கள்

(கொழும்பு)

பிள்ளைகளை முறையான வசதிகளுடன்கூடிய பாடசாலைகளில் சேர்க்க நினைப்பது பெற்றோர்களின் ஒரு உணர்வுபூர்வமான எண்ணமாகும். அதனைக் கூட பிரபல்யம் என்ற வார்த்தையைக்காட்டி எமது நியாயமான கோரிக்கைகளை புறக்கணிப்பது வெட்கப்பட வேண்டிய விடயம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர் வைத்தியர் சாய் நிரஞ்சன் தெரிவித்தார்.

மேலும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் கல்வியமைச்சில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது நோய் காவு வண்டியில் உணவு கொண்டு சென்றார்கள் என கூறப்படும் கருத்தையும் மறுத்ததோடு அவ்வாறான விடயங்களை காட்டி எம்மை ஆர்ப்பாட்டக்காரர்களாக சித்தரிக்க வேண்டாம் எனவும் அரசாங்கத் தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அரச வைத்திய அதிகாரிகளின் பிள்ளைகளை அரச பாடசாலைகளில் இணைப்பது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7-10)

## இளைஞன்மீது தாக்குதல்; பொறுப்பதிகாரி மாற்றம்

(கொழும்பு)

ஹற்றன் நகரிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தில் வைத்து இளைஞர் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில், ஹற்றன் பிரதான பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா பொலிஸ் நிலையத்திற்கு இவரை மாற்றியுள்ளதாக ஹற்றன் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த சிகை அலங்கரிப்பு நிலையத்தின் ஊழியர் ஒருவர் நேற்று முன்தினம் தாக்கப்பட்டதாக கூறி அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்ட இளைஞன் தொடர்ந்தும் டிக்கோயா கிழங்கன் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7-10)

## கரவெட்டி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு பேருந்து சேவையை நடத்த கோரிக்கை

(கரணவாய்)

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு செல்லும் பேருந்து சேவையில் மூன்று சேவையினை கரவெட்டி ஊடாக நடத்துமாறு அப்பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து புறப்படும் பேருந்து கலிகைச்சந்தி- அரசடிச்சந்தி- அம்பன் வைத்தியசாலை- மண்டான்வீதி ஊடாக யாழ்ப்பாணம் வரை காலை, நண்பகல், பிற்பகல் ஆகிய மூன்று வேளை சேவையை வழங்குவதனூடாக கரவெட்டிப் பகுதிகளில் வசிக்கும் அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பயன்பெறுவர் எனவும் வைத்தியசாலைக்கு நடந்து செல்வோரும் நன்மை அடைவர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எனவே இது விடயத்தில் இ.போ.சபையினர் கவனம் செலுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில மாலு சந்தி, வதிரி சந்தி, இரும்புமதவடி, சக்களாவத்தை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக்குளம் கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில் அரிப்பு, சவேரியார்குளம், வெள்ளிமலை, CECB, முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீர் ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பாம் கவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலை மன்னார் கடற்படைமுகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# அமைச்சுப் பதவிக்கு ஆபத்து

தமது கடமைகளை சரியாகச் செய்யத் தவறும் அமைச்சர்களின் பதவியை பறிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அமைச்சுக்களின் முன்னேற்ற அறிக்கை கவனத்திற் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அமைச்சரவை அமைச்சுக்களின் முன்னேற்ற அறிக்கை கவனத்திற் கொள்ளப்படவுள்ளது. முன்னேற்ற அறிக்கையில் கடமைகளை சரியாக செய்யத் தவறிய சில அமைச்சர்களிடமிருந்து அந்தப் பதவிகள் பறிக்கப்படவுள்ளன.

இவர்களுக்கு இராஜாங்க அல்லது பிரதி அமைச்சுப் பதவிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அமைச்சர்களின் செயற்பாடுகள், ஆற்றப்பட்டுள்ள பணிகளின் எண்ணிக்கை, தொழிற்சங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட முரண்பாடுகள், அமைச்சுக்களின் முன்னேற்ற அறிக்கை போன்றவற்றின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. அமைச்சரவை மாற்றத்தின் சில அமைச்சர்களின் துறைகளில் மாற்றம் செய்யப்படவுள்ளது.

இராஜாங்க அமைச்சர்கள் சிலருக்கு அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சுப் பதவி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்ட யோசனை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவையில் மாற்றம் செய்ய ஜனாதிபதியும் பிரதமரும் ஏற்கனவே இணங்கியுள்ளனர். அமைச்சரவை மாற்றம் குறித்து ஜனாதிபதியும் பிரதமரும் எதிர்வரும் நாட்களில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். (இ-7-10)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### நான் யார்?



நான் உடல் என்று குறுகி நிற்பதா? நான் மனம் என்று விரிந்து நிற்பதா? நான் உயிர் (ஆன்மா) என்று உயர்ந்து நிற்பதா? நான் பிரம்மம் என்று உணர்ந்து, முழுதுணர்ந்து நிற்பதா? குறுகி நின்றால் விரிவு இல்லை. விரிந்து நின்றால் குறுக்கமும் விரிவும் மட்டும் தான் உண்டு, உயர்வு இல்லை. உயர்ந்து நின்றால் விரிவும் உயர்வும் மட்டுந்தான் உண்டு உணர்வு, முழுதுணர்வு இல்லை. உணர்ந்து நின்றால் இவை அனைத்தும் உண்டு.

உடல் தோற்றமாக இருக்கிறது. உயிர் ஆற்றலாக இருக்கிறது. மனம் உணர்வாக இருக்கிறது. மனம் தான் நான் எனில் மனம் என்ற ஒன்று தனியாக இல்லையே! உயிர்தானே மனம் என மறுபெயர் பெற்றிருக்கிறது. உயிரோ அணுக்கூட்டம். அணுவோ பிரம்மத்தின் இயக்க நிலை. எனவே, நான் பிரம்மம் என்பது தெளிவாகிறது.

நான் என்ற ஆராய்ச்சி இறையுணர்வில் முடியும். இறைநிலை உணர்ந்த தெளிவில்தான் ஆசை ஒழுங்குறும். எது எல்லாவற்றிற்கும் பெரியதோ, எதை விடப் பெரிது வேறொன்றும் இல்லையோ, அதுவே நானாக இருக்கும் போது அந்நிலை உணர்ந்த தெளிவில் தான் இருக்கும் போது எனக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று அவா எழ இடம் எது?

என்னை உடலளவில் குறுக்கிக் கொண்டிருந்தபோது எதெதனோடோ என்னை ஒப்பிட்டுக் கொண்டேன். அப்போது நான் பெரியவன், நான் வல்லவன், நான் செல்வன், நான் அழகன் என்றெல்லாம் தருக்கு வந்தது. ஒப்புவமையில்லாத ஒரு பெரிய பொருளாக நானே இருக்கும் நிலையை உணர்ந்து கெ?ண்டு விட்ட போது எதனோடு என்னை ஒப்பிட்டுத் தருக்குவது? ஆணவம் எழக் காரணமே இல்லாமலல்லவா போய் விடுகிறது. நானே பிரம்மம் ஆக இருக்கிறேன், பிரம்மம் எல்லாமாக இருக்கிறது என்னும்போது, எல்லாமே நானாக இருக்கும் நிலையையும், நானே எல்லாமாக இருக்கும் நிலையையும் நான் உணர்ந்து மறவாமல் இருக்கும் போது, எதன் மீது பற்று வைப்பது? என்னுடையது என்ற பற்று எழ முகாந்திரமே இல்லையே! நான் இன்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் ஒருங்கே ஒழியும் இடம் நான் யார்? நான் பிரம்மம் என்ற தெளிவுதான்.

# எவறஸ்ட் வி.கழகம் நடத்தும் பொன்விழா கிரிக்கெட் போட்டி

## ஞானம்ஸ் சம்பியன்

எவறஸ்ட் விளையாட்டுக்கழக பொன்விழாவினை முன்னிட்டு நடத்தி வந்த கிரிக்கெட் சுற்றுப்





போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மின்னொளியில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் நிர்ணயிக்கப்பட்ட 6 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 61 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அதிக பட்சமாக பிரகாஷ் 24 ஓட்டங்களை பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வதிரி சிறிமுருகன் 6 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 48 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அணி சார்பாக டெஷ்மன் 25 ஓட்டங்களைப் பெற்று 13 ஓட்டங்களால் ஞானம்ஸ் வெற்றி பெற்றுள்ளது.

தொடர் ஆட்டநாயகன் -டெஷ்மன் (சிறிமுருகன்), ஆட்டநாயகன்-பிரகாஷ் (ஞானம்ஸ்).

பந்து வீச்சாளர் -சுவேந்திரன் (ஞானம்ஸ்). (க)

# 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம்

## வவுனியா இளைஞன் இரண்டாமிடம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தி வருகின்ற 28 ஆவது தேசிய விளையாட்டு விழா நிகழ்வுகள் பதுளை வின்சன் டயஸ் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இப்போட்டியில் இடம் பெற்ற 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவுனியா கூமாங்குளத்தை சேர்ந்த கே.நவநீதன் என்பவர் இரண்டாமிடத்தை பெற்றிருக்கின்றார். (க-250)

# கலைமதி விளையாட்டுக் கழக கரப்பந்தாட்ட முடிவுகள்

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட போட்டிகளின்

பி பிரிவினருக்கான போட்டி முடிவுகள்.

முதலாவது போட்டியில் புத்தூர் கலைமதி - பி.2 விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டியில் புத்தூர் கலைமதி வி.கழகத்தை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி வி.கழகம் மோதியது.

இதில் பாரதி வி.க 2:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாவது போட்டியில் நீர்வேலி காமாட்சி அம்பாள் வி.கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி வி.கழகம் மோதியது.

இதில் வளர்மதி வி.க 2:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இப் போட்டியில் வெற்றி பெற்ற அனைத்து விளையாட்டுக் கழகங்களும் அரையிறுதி போட்டிக்கு தெரிவாகின. (க)

# யங்கம்பன்ஸ்சை வீழ்த்தியது பலாலி விண்மீன் வி.கழகம்

## நிஷாந்தன் ஹற்றிக் கோல்



பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான சூப்பர்-8 உதைபந்தாட்டப் போட்டியில் 22.09.2016 அன்று நடைபெற்ற போட்டியில் பலாலி விண்மீனை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதியாட்டத்தில் இரு அணி வீரர்களும் கோல் போடாது முதல் பாதியாட்டம் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில் யங்கம்பன்ஸ்வீரர்களுக்கு கிடைத்த கோல் வாய்ப்பை தவற விட விண்மீன் வீரர் நிசாந்தனால் 31/34 ஆவது நிமிடங்களில் இரண்டு கோல் போடப்பட்டது. அடுத்த 44 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் வீரரின் முறை தவறால் விண்மீன் அணிக்கு தண்ட உதைப்பு வழங்கப்பட்டது.



அதனைக் கோலாக மாற்றியதுடன் நிசாந்தன் தனது ஹட்ரிக் கோலை இத் தொடரில் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது. இறுதியாட்ட நேர முடிவில் 3:0 என்ற ரீதியில் யங்கம்பன்ஸ் அணியை வீழ்த்தியது விண்மீன். சூப்பர் -8 (குழு- பி) போட்டியில் 12 புள்ளிகளுடன் விண்மீன் அணியும் 8 புள்ளிகளுடனும் யங்கம்பன்ஸ் அணியும் உள்ளன.

இரு அணிகளும் அரை இறுதிக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது. ஆட்ட நாயகன் விண் மீன் வீரராக நிசாந்தன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# அரையிறுதியில் கலைமதி வி.கழகம்



அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்ட போட்டிகளில் பி பிரிவினருக்கான அரையிறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் விவேகானந்தா வி.கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் கலைமதி வி.க (25:20, 25:17, 25:13) என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தெரிவாகியது. (க)







கெருடாவில் அண்ணா சனசமூக நிலைய வெள்ளிவிழாவை முன்னிட்டு அண்மையில் நடாத்தப்பட்ட ஆண், பெண் இருபாலருக்குமான உள்ளூர் கழகங்களுக்கிடையிலான கயிறு இழுத்தல் போட்டி நிகழ்வின் போது...

# உரிமை முழக்கத்துடன் முன் நகர்ந்த எழுக தமிழ்
















## குழு மோதல்; மாணவன் பலி

### ஆறு பேர் கைது

(கொழும்பு)

வெலிப்பன்ன பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையே நேற்று இடம்பெற்ற மோதலில் 16 வயதான பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தையடுத்து ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இக் குழுக்களுக்கிடையேயான கிரிக்கெட் விளையாட்டின் போது அகலப் பந்து (வைட் போல்) தொடர்பில் எழுந்த சர்ச்சையை அடுத்து, துடுப்பாட்ட மட்டையினாலேயே குறித்த மாணவன் அடித்துக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)

## இந்திய அமைச்சர்...

துரையாடுவார்.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம கடந்த காலங்களில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டிருந்த பொது மத்திய அமைச்சர் நிர்மலா சீத்தாராமனை இலங்கைக்கு விஜயமொன்றினை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பினை ஏற்று கடந்த ஆகஸ்ட மாதம் இறுதி வாரத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த நிலையில் குறித்த விஜயம் இறுதி நேரத்தில் காலவரையறையின்றி பிற்போடப்பட்டிருந்தது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கேரிக்கும் இடையில் கடந்த மாதம் 25ஆம் திகதி புதுடெல்லியில் நடந்த இந்திய அமெரிக்க பொருளாதார கலந்துரையாடலின் நிமிர்த்தம் அவர் புதுடெல்லியில் நடந்த குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டமையின் காரணமாகவே குறித்த விஜயம் பிற்போடப்பட்டிருந்தது.

எனினும் குறித்த கலந்துரையாடல் நிறைவடைந்திருக்கின்ற நிலையில் இந்திய மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் 2 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களை சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபட உள்ளார்.

இந்த சந்திப்பின் போது இலங்கை -இந்திய கூட்டு ஆணைக்குழுவில் இணக்கம் காணப்பட்ட இரு நாடுகளுக்கு இடையிலான பொருளாதார மற்றும் தொழிநுட்ப கூட்டு ஒப்பந்தம் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வரும் இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-11)

## லெப்.கேணல்...

அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கின்றான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரினும் உன்னதமானது எமது உரிமை. எமது சுதந்திரம் எமது கௌரவம் என்றும் ஈகச்சுடர் லெப்ரினன்ட் கேணல் திலீபன் நினைவாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

இத்தகைய அர்ப்பணிப்புள்ள ஒரு மாவீரனின் நினைவு தினம் இன்றைய தினம் புலத்திலும் தமிழர் தாயகம் எங்கும் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்படவுள்ளது.(செ-4)

## காற்றின் வேகம் அதிகமாகும்!



(கொழும்பு)

நாட்டின் கடல் பிரதேசங்களில் ஒருசில நாட்களுக்கு காற்றின் வேகம் 60 - 70 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக் கூடும் என காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

காலநிலை அவதான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி காங்கேசன்துறை முதல் புத்தளம் ஊடாக கொழும்பு வரையான கடல் பிரதேசத்தில் காற்றின் வேகமானது அதிகரித்து காணப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த கடற் பிரதேசங்களில் கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் அவதானமாக செயற்படுமாறு காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (செ)

# 16 வருடங்களுக்கு பின்...

திகதி இந்த விபத்து சம்பவம் இடம் பெற்றது.

குறித்த வழக்கில் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், பதுளை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயவர்தன ஆகியோர் அடங்கிய நீதிபதி குழாம் இந்தத் தீர்ப்பை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியுள்ளது.

இராணுவ பவள் வாகனத்தை ஓட்டிவந்த இராணுவ சாரதியின் கவனயீனத்தினால் ஹேரத் முதியான்சலாகே ஹீன் பண்டா என்பவர் மரணமாகியதாகக் குற்றம் சுமத்தி திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் பொலிசார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு விசாரணையின் முடிவில் உயிரிழந்தவருக்கு மரணத்தை ஏற்படுத்தியமைக்காக அவருடைய மனைவிக்கு 50 ஆயிரம ரூபாய் நட்ட ஈடு வழங்க வேணடும் என நீதவான் நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆயினும், இதனை ஏற்க மறுத்த இறந்தவரின் மனைவி திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் வாகனத்தைச் செலுத்தி வந்த இராணுவசாரதி, இராணுவ தளபதி, சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராக சிவில் வழக்கொன்றைப் பதிவு செய்திருந்தார்.

வாகன விபத்து மரணம் தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள் நடைபெற்று வந்த போது குற்றம் சுமத்தப்பட்டவராகிய இராணுவ சாரதி மரணமடைந்திருந்த நிலையலும், திருகோணமலை மேன் முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வந்தது.

அங்கு இரண்டு நீதிபதிகள் அடங்கிய வெவ்வேறு குழாமினால் வழக்கு விசாரணைகள் நடைபெற்றன. இறுதியாக பிரதம நீதியரசரினால் விசேடமாக நியமனம் செய்யப்பட்ட நீதிபதிகளான இளஞ் செழியன், ஜயவர்தன ஆகிய இருவர்அடங்கிய குழாமின் முன்னிலையில் இந்த வழக்கு தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டு வந்தது.

விபத்து மரணத்தில் நேரடியாக சம்பந்தப்பட்ட இராணுவ சாரதி உயிரோடு இல்லாத போதிலும், இறந்தவரின் மனைவி, அவருக்கு அடுத்ததாக இராணுவ தளபதியையும், சட்டமா அதபரையும் குற்றவாளிகளாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் உயிரிழந்தவரின் மனைவிக்கான நட்ட ஈட்டை இராணுவத் தளபதியே வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியிருந்தது.

எனினும் இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், இராணுவ தளபதி இந்த நட்ட ஈட்டுத் தொகையை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக இராணுவ தரப்பில் ஆஜராகியிருந்த அரச சட்டத்தரணி தெரிவித்திருந்தனர்.

மேலும் நட்ட ஈட்டுத் தொகையை ஏற்றுக்கொண்டு வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மரணமடைந்தவரின் மனைவி தனது சட்டத்தரணியின மூலம் இணக்கம் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து நட்ட ஈட்டுத் தொகையான ஒன்றரை இலட்ச ரூபாயுக்கான காசோலை நீதிமன்றத்தில் வைத்து, அந்தப் பெண்ணிடம் கையளிக்கப்பட்டு 16 வருடங்களாகத் தொடர்ந்த வழக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. (செ-9)

DEUTSCH & ITALIAN
வகுப்புக்கள்
யாழ்ப்பாணம், சுன்னாகம்,
நெல்லியடி, கிளிநொச்சி
T. நந்தன் 077 078 2022
077 670 7327

V2 TRAVELS
குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.
• வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
• வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
• இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.
(C-5799)
தொடர்புகளுக்கு: 0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

BEACON TECH CITY
வெலிங்டன் சந்தி, யாழ்நகர்.
யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் உயர்தர 2016-ம் ஆண்டுக்கான செய்முறை வகுப்புக்கள் 03.10.2016 நடைபெறவுள்ளதால் பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும். பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டவை.
இயக்குநர்
தொடர்புகளுக்கு :-
077 4873 338, 071 8099 859

டயானா பிளாஸ்டிக்
அனைத்து வகையான வாகன, மோட்டார் சைக்கிள் உடைந்த பிளாஸ்டிக் 1,2,3 வருட கால உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்
• பைவர் கிளாஸ் உற்பத்தி • பிளாஸ்டிக் கீற்றெக்
• பைவர் கிளாஸ் மோல்ட் • பிளாஸ்டிக் மீள்சுழற்சி
என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.
இந்த விளம்பரத்தைக் கொண்டு வருபவர்களுக்கு 10% விலைக் கழிவுண்டு
108. பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8680
077 592 5088

# போகம்பரை சிறை...

இதேவேளை, அநுராதபுரம் சிறைச்சாலையில் ஏனைய 16 தமிழ் அரசியல் கைதிகளும் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் 17 பேரும் கடந்த 21 ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்டகாலமாக தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், தமது வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் வலியுறுத்தி கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபுட்டுள்ளனர்.

தமது வழக்குகளை தமிழ் பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டும் எனவும் அனுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-11)

# சிறுவர் வழக்...

படும் சிறுவர் பாதுகாப்பு கொள்கையினூடாக இதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் நடஷா பாலேந்திரன் கூறினார்.

இதனடிப்படையில் பொலிஸ் பிரிவிலும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக விசேட பிரிவினரை உருவாக்குவதற்காக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்படும் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. (செ-11)

# லெப்.கேணல் திலீபனின்...



கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தண்ணீர் அருந்தவும் போவதில்லை என்று அறிவித்தார். ஆனால் அந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் உண்ணாவிரதத்தின் பன்னிரெண்டாம் நாளான செப்ரெம்பர் 26 ஆம் திகதி 1987 இல் இறந்தார்.

**திலீபன் முன்வைத்த ஐந்து கோரிக்கைகள்**

1). மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2). சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3). அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4). ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5). தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இந் நிலையில் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளில் தியாக தீபம் திலீபனின் நினைவு தினம் இன்றையதினம் உணர்வுபூர்வமான முறையில் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

திலீபன் ஒரு ஈடு இணையற்ற மகத்தான தியாகத்தை புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வு. தமிழீழ போராட்ட வரலாற்றில் ஒருபுரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழ தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டை விஞ்சிய அகிம்சை பேரெழுச்சி. உலகத்தின் மனட்சாட்சியை தீண்டி விட்ட நிகழ்ச்சி. அவனது இறப்பு தமிழ் மக்கள் எல்லோரையும் எழுச்சி கொள்ளசெய்த, ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது. திலீபன் உங்களுக்காக இறந்தான் உங்கள் உரிமைக்காக இறந்தான. உங்கள் மண்ணுக்காக இறந்தான். உங்கள் பாதுகாப்பிற்காக சுதந்திரத்திற்காக கௌரவத்திற்காக இறந்தான். தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னத தியாகத்தை செய்யமுடியுமோ அந்த அற்புதமான 23ஆம் பக்கம் பார்க்க....

# வலி.வடக்கு குரும்பசிட்டி...

அண்மையில் மக்கள் பாவனைக்காக அனுமதிக்கப்பட்ட வலி.வடக்கு குரும்பசிட்டி ஜெ/242 கிராமசேவகர் பிரிவில் உள்ள வீடு ஒனறில் இருந்த கிணற்றை வீட்டின் உரிமையாளர் கடந்த 23ஆம் திகதி துப்புரவு செய்துள்ளார்.

அப்போது ஒரு மோட்டார் குண்டு கிணற்றில் இருப்பதை கண்டு உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அதனை உறுதிப்படுத்தியதுடன் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் அவற்றை மீட்பதற்கான அனுமதி பெற்று விசேட அதிரடிப்படையின் உதவியுடன் நேற்றையதினம் நண்பகலில் இருந்து பிற்பகல் வரை கிணற்றில் இருந்த வெடிபொருட்களை மீட்டுள்ளனர்.

குறித்த நேரம் வரையில் 50க்கும் மேற்பட்ட மோட்டார் வெடிபொருட்கள் மீட்கப்பட்டதுடன் மேலும் வெவவேறு வகையான வெடிபொருட்கள் பெருமளவில் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் வெடிபொருட்கள் அங்கு காணப்படுவதாகவும் அதனை மீட்கும் பணி இன்றும் தொடரும் எனவும் அவற்றை மீட்ட பின்னரே மீட்கபபட்ட வெடிபொருட்களின் மொத்த எண்ணிக்கையை வெளியிட முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-9)

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2017
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
சாவகச்சேரியில்
அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
அனுமதிகளை 26.09.2016 திங்கட்கிழமையிலிருந்து 01.10.2016 சனிக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.
சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
இயக்குநர்கள்
(அ-5802)

# புதிய கட்சியை தொட...

நல்லிணக்கத்தை அவர்களுக்கு தெளிவுப்படுத்த முயற்சிப்பது செவிட்டு யானைகளுக்காக வீணை வாசிப்பது போலாகும்.

மக்களை துன்பத்திற்கு உள்ளாக்கும் சம்பவமே வடக்கில் நடக்கிறது. நாங்கள் போரை வென்றதன் காரணமாகவே வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அந்த பதவி கிடைத்தது. இல்லாவிட்டால் அவர் யாழ்ப்பாணம் பக்கமே செல்ல முடியாது போயிருக்கும்.

தற்போது அரசாங்கத்தின் வேலைகளை அரசாங்கத்தினாலேயே தெளிவுப்படுத்த முடியாதுள்ளது.

இதைவிட வலுவாக மாறிவரும் எதிர்க்கட்சியை பிரதி நிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்படுவது சாதாரண விடயமாகவும் மாறியுள்ளது எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# கிபிர்க் குண்டு...

கிளிநொச்சி - சுண்டிக்குளம் காட்டுப்பகுதியிலிருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை, கிபிர்க் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர், குண்டை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட குண்டு, 6 அடி நீளமும் 300 கிலோ கிராம் எடை கொண்டதுமாகும் என விசேட அதிரடிப்படையினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

எனினும் குறித்த குண்டு வெடிகாத நிலையில் செயலிழந்துள்ளதாகவும் இதனை முற்றிலும் செயலிழக்கச் செய்யும் நோக்கில் அதிரடிப்படையினர் அதனை மீட்டுச் சென்றுள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (செ-281)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.